2020 - இதழ் 10 இலவசம்

ஐப்பசி - 2020

# உள்ளான மனிதன்

மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2020 - இதழ் 10

## இயேசு சொன்னார்:

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

# கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2020 - இதழ் 10


### 4 விசுவாசம்

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

### 6 ஆறுதல் வலையம்

அவ்வண்ணமாகவே ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவின் பண்புகளை இழந்து போகும் போது, அவனை எப்படி அழைத்தாலும், பிரயோஜனமற்ற மனிதனாக மாறிவிடுவான். கிறிஸ்துவின் ஆவியில்லாதன் கிறிஸ்துவினுடையவனல்ல.

### 11 பிரசங்கக் குறிப்புகள்

நாங்கள் எப்போதும் இயேசு கிறிஸ்துவை சார்ந்த ஜனங்களாக வாழ வேண்டும். தனக்கு இன்னும் சொற்ப காலம் தான் இருக்கின்றது என்று அறிந்திருக்கின்ற பிசாசானவன், கெர்ச்சிக்கின்ற சிங்கம் போல யாரை விழுங்கலாம் என்று சுற்றித் திரிகின்றான்.

### 13 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 13ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... ஐப்பசி 2, 4, 6, 9, 17, 18, 22, 24, 28, 30

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... ஐப்பசி 1, 2, 4, 6, 8, 14, 17, 18, 21, 22, 24, 28, 30

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**
... ஐப்பசி 5, 9, 14, 19, 27, 30

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... ஐப்பசி 1, 3, 4, 7, 9, 12, 19, 20, 22, 25, 27, 28, 30, 31

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**
... ஐப்பசி 2, 3, 9, 12, 14, 15, 19, 20, 21, 22, 26, 28, 30, 31

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**
... ஐப்பசி 3, 5, 7, 8, 11, 12, 13, 15, 16, 17, 20, 22, 25, 26

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**
... ஐப்பசி 1, 2, 3, 9, 12, 13, 15, 21, 25

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**
... ஐப்பசி 1, 5, 6, 8, 9 , 10, 11, 12, 13, 15, 17, 21, 23, 25, 26, 27, 29

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... ஐப்பசி 2, 11, 13, 15, 17, 22

**பொறுமையோடு காத்திருங்கள்**
... ஐப்பசி 1, 3, 4, 9, 20, 22, 24

**தேவ நீதி வெளிப்படும்**
... ஐப்பசி 2, 20, 24, 26

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**
... ஐப்பசி 2, 5, 8, 10, 11, 13, 16, 19, 20, 21, 23, 28, 29, 30

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... ஐப்பசி 3, 5, 6, 11, 13, 16, 18, 19, 24, 25, 27, 29, 20, 31

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... ஐப்பசி 14, 19, 20, 21, 23, 27, 28 , 29

gtachurch.ca

# விசுவாசம்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

“விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். நாமோ கெட்டு ப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிற வர்களாயிருக்கிறோம்.” என்று பரிசுத்த வேதாகமத்திலே (எபி.10:38-39) வாசிக்கிறோம்.

விசுவாசத்தினாலே நாம் தேவ வார்த்தையிலுள்ளவற்றை உறுதியாக நம்புகிறோம். அதில் கூறியுள்ள இன்னமும் காணப்படாதவைகள் கூட நமக்கு நிச்சயமுமாயுள்ளது. ஆம் விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சிபெற்றார்கள். அவர்கள் விசுவாசத்தினாலே அநேக காரியங்களை செய்து முடித்தார்கள்.

விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்ட வைகள் நிறைவேறும் என்று எலிசபேத் என்னும் தேவ பக்தியுள்ள பெண்மணி இயேசுவின் தாயாகிய மரியாளைப்பார்த்து வாழ்த்தினார். இயேசுவின் தாயாகிய மரியாள் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவராய் இரு ந்த ஒரு பெண்மணி. அவருடைய வாழ்வின் விசுவாசம் என்பது என்ன?

தேவதூதனாலே இயேசுகிறிஸ்துவின் பிறப்பு மரியாளிடத்தில் அறிவிக்க ப்பட்டபோது, எவ்வித பயமோ சந்தேகமோ இன்றி இதோ, நான் ஆண்டவ ருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்று தேவன் தனது வாழ்வை நடத்தும்படி தன்னைத் தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

## தேவனிடத்தில் விசுவாமாயிருப்பதென்பது, அவரு டைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவரது சித்தத் தை எமது வாழ்வில் நிறைவேற்றுவதாகும்.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோ கராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தி னாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.

அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களு க்குச் சொல்லுவேன் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கூறியுள்ளார்.

ஆகையால் யாராகிலும் ஒருவன் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிய மனதில்லாமலும் தேவ சித்தத்தை நிறைவேற்ற விருப்பமில்லாமல் இருப்பின், அவன் தேவனிடத்தில் விசுவாசமில்லாமலிருப்பதே அதன் காரணமாயுள்ளது.

இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது, மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கூறியுள்ளார்.

## நீதிமான் தேவனை விசுவாசிக்கிறவனாயுள்ளான். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.

தேவனுடைய வாக்குத்தத்தமானது, அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன், என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கல த்திலே வைப்பேன்.

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக் குக் காண்பிப்பேன்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

தேவனை நோக்கிப் பார்த்தவர்கள் வெட்கப்பட்டுப் போகவில்லை. அவர்களுடைய முகங்களெல்லாம் பிரகாசித்தது. வாக்களித்தவர் உண்மையுள்ளவர். முடிவுபரியந்நதம் உங்களை காத்து நடத்துவார்.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் **www.gtachurch.ca/live** இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

# ஆறுதல் வலையம்

போக வேண்டிய தூரம் இன்னும் அதிகம் ஆனால் செல்லும் பாதையோ கரடு முரடாய் இருந்தது. மழையில்லாத வறட்சியான நாட்கள் எனவே வெயிலின் அகோரத்தினால் நாவு வறண்டு போய்விட்டது. சற்று நிழலுக்கு ஒதுங்குவதற்கு மரங்களோ எந்த மறைவோ இருக்கவில்லை. இந் நிலையிலே ஒரு ஊழியர் தான் வசிக்குமிடத்திலிருந்து இன்னுமொரு கிராமத்திற்கு கால்நடையாக சென்று கொண்டிருந்தார். போகும் வழியிலே, நடைபாதைக்கு சற்று அப்புறமாக ஒரு எளிமையான குடிசையில் இந்தவர்கள் இந்த வயதானவர் கால்நடையாக வந்து கொண்டிருப்பதை கண்டார்கள். அவர் அருகில் வந்ததும், ஐயா பெரிவரே, இந்த அகோரமான நாளிலே, கால்நடையாக எங்கே சென்று கொண்டிருக்கின்றீர்கள்? அடுத்த கிராமம் இன்னும் வெகு தொலைவிலே இருக்கின்றதே, உள்ளே வந்து சற்று இளைப்பாறி சென்றால் என்ன என்று கேட்டுக் கொண்டார்கள். நன்றி! நீங்கள் பெரிய மனசுக்காக நன்றி! எனக்கு கொஞ்சம் தண்ணீர் கொடுக்க முடியுமாக என்று வயதானவர் கேட்டுக் கொண்டார். அந்த குடும்பத்தினரோ, அந்த ஐயா பெரியவரே உள்ளே வாருங்கள் என்று வருந்திக் கேட்டுக் கொண்டதனிமித்தம், அவர் உள்ளே சென்று உட்கார்ந்தார். அவர் ஒரு தேவ ஊழியர் என்பதை அவர்கள் அறியவில்லை. அவருக்கு தாகத்திற்கு தண்ணீர் கொடுத்து, தங்களிடம் இருக்கும் மதிய உணவை அவரோடு பகிர்ந்து கொண்டார்கள். அங்கு சற்று ஓய்திருந்த ஊழியர் புத்துணர்ச்சியும் புதுபெலனுமடைந்தவராய், அவர்களுக்கு நன்றி கூறி, ஆசீர்வதித்து ஜெபித்து தான் சென்றடைய வேண்டிய கிராமத்தை நோக்கி தன் பிரயாணத்தை தொடர்ந்தார்.

நடைபாதை வழியாக சென்ற கொண்டிருந்த வயதானவர் தேவ ஊழியர் என்பதை அறியாதிருந்த போதும், அந்நியரான அந்த வயதானவரின் சூழ்நிலையை அறிந்து அவர் ஆறுதலடையும் இல்லமாக தங்கள் எளிமையான இருப்பிடத்தை மாற்றினார்கள். உலக பார்வையிலே அவர்கள் எளிமையும் சிறுமையுமானவர்கள். ஆனால் அவர்கள் உபசரிப்பிலே ஐசுவரியமுள்ளவர்காள இருந்தார்கள்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, வாக்களிக்கப்பட்ட தும், கண்காணாததுமான செழிப்புள்ள கானான் தேசத்தை சென்றடை யும்படிக்கு, வனாந்திர பாதை வழியாக தேவனுடைய ஜனங்கள் நடத்திச் செல்லப்பட்டார்கள். போகும் பாதை இலகுவாதல்ல. அங்கே அவர்கள் போகும் வழியில், பல சிரமங்களையும், சவால்களையும், பயங்கரங்களை யும் எதிர் நோக்க வேண்டியிருந்தது. அவைகள் மத்தியிலே தாங்கள் சென்றடைய வேண்டிய தேசத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். அந்த பயணத்திற்கு ஒப்பனையாக, முற்காலத்திலே நாங்கள் அக்கிரம ங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம். இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கே ற்றபடியாகவும் நடந்துகொண்டோம். நமது மாம்ச இச்சையின்படியே நட ந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தி னாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்

தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூ ர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களா யிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். தேவ கிருபையி னாலே பாவ சாபத்திலிருந்து இரட்சிப்பை பெற்றுக் கொண்டோம். (எபேசியர் 2:1-8)

நாம் தாபரிக்கும் ஊராகிய பரம தேசத்தை நோக்கி யாத்திரிகளாக, இந்த வனந்தரமாகிய உலகத்தை கடந்து கொண்டிருக்கின்றோம். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. நிலையான பரம தேசத்தை சென்றடையும்வரை இந்த உலத்திலே எங்களுக்கு உபத்திரவங்கள், சவால்கள், பயங்கரங்கள் உண்டு. பலர் உபத்திரவம், வியாகுலம், துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம் போன்றவற்றை சந்திக்க நேரிடுகின்றது. கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. முன்னோடிகளாக திகழ்ந்து ஆதி விசுவாசிகளாகிய ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களு டையவர்களை உயிரோடெழுந்திருக்கப்பெற்றார்கள் வேறுசிலர் மேன்மை யான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதி யாமல், வாதிக்கப்பட்டார்கள். வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளை யும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டா ர்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டய த்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவை யும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலே யும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். இன்றும் சிலர் இப்படியாக உபத்திவரங்களை சகித்துக் கொண்டிருக்கின்றார்கள். (ரோமர் 8:36, எபிரெயர் 13:14, பிலிப்பியர் 2:15, எபேசியர் 6:12, யோவான் 16:33, எபிரெயர் 11:35-38).

கருப்பொருளாவது, இந்த யாத்திரையில் எங்களை சூழந்திருக்கும் உபத் திரவங்களும் பயங்கரங்களும் அநேகமாயிருக்கின்றது. இவைகளை விட இன்னும் அதிகமாக பாரங்களை நாங்கள் எங்கள் மேலோ அல்லது மற்றவர்கள் மேலோ ஏற்றிக் கொள்ளாமல் எங்கள் வாழ்க்கையானது ஆறுதல் வலையமாக இருக்க வேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். (கலாத்தியர் 6:2) அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயா சப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களா யிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களு டைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள். மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லு ங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள் (1 தெச 5:12-14).

நீண்ட பிரயாணத்தினால் களைபுற்றிருந்த அந்த வயதான ஊழியரை கண்ட அந்நியர்களாகிய அந்த குடும்பத்தார்,. “இந்த வயதிலே இவருக்கு இந்த பிரயாணம் தேவையா? இவர் ஞானமற்றவராக கடும் வெயிலிலே சென்று கொண்டிருக்கின்றாரே” என்று அவருக்கு விரோதமானவைகளை அவர்கள் பேசவில்லை. மாறாக தங்களுடைய பெலத்தின்படி அவரை உபசரித்து, அவர் செல்ல வேண்டிய பிரயாணத்திற்கு ஆதரவாக மறுபடியும் அவரை பெலனடையச் செய்தார்கள். எங்கள் மேல் அன்புகூர்ந்த எங்கள் பரம பிதாவாகிய தேவன் அவர் சகலவித ஆறுதலின் தெய்வமாக இருக்கின்றார். எனவே அவருடைய பிள்ளைகளாகிய நாங்கள் அந்த திவ்விய சுபாவத்தை எங்களில் தரித்துக் கொள்ள வேண்டும். இந்த மனிதனோடு பேசினால் மன ஆறுதல் உண்டாகும். என்னுடைய பெலவீனங்களை குறித்து நீதி நியாயத்தை பேசாமல், நான் விடுதலையும் வழியை எனக்கு கற்றுக் கொடுப்பார். இந்த அம்மாவிடம் நான் என் குறைகளைச் சொன்னால் அதைபற்றி அவள் பேசித் திரியாமல், அவள் தன் மனதில் அவைகளை வைத்து, எனக்காக ஜெபம் செய்வாள் என்ற எங்களை குறித்த நம்பிக்கை மற்றவர்களிடத்தில் வளரவேண்டும்.

நாங்கள் பார்வைக்கு அழகும் பாவனைக்கு உகந்ததல்லாததுமான பாத்திரங்களாக இருக்கக் கூடாது. தேவனுக்கென்று நல் உபயோகமுள்ள பாத்திரங்களாக வாழ வேண்டும். கானகப் பாதை வழியாக தன் ஒட்டகத்துடன் சென்று கொண்டிருந்த மனிதன், தொலைவிலே தண்ணீர் தடாகம் ஒன்றை கண்டான். தன் தாகத்தை தீர்த்து, இளைப்பாறும்படிக்கு மகிழ்ச்சியுடன் அந்த தண்ணீர் தடாகத்தை நோக்கி விரைந்து சென்றான். அவன் சற்று அருகில் வந்த போது, அது ஒரு கானல் நீர் என்பதை உணர்ந்து கொண்டான். இவ்வண்ணமாகவே இன்று சில மனிதர்களுடைய வாழ்க்கையும் இருக்கின்றது.

சூழ்நிலைகள் காரணமாக பல நாட்களாக மனவருத்தத்துடன் வாழ்ந்து வந்த ஒரு மனிதனானவன், தன் நிலையை யார் புரிந்து கொள்வார்கள் என்று தனக்குள் தவித்துக் கொண்டிருந்தான். தனக்கு ஆறுதல் கிடைக்கும் இடத்தை தேடி அலைந்தான். அவன் சென்ற சபை ஐக்கியத்திலே இன்னுமொரு உடன் சகோதரனுடைய வாழ்க்கையை பார்க்கும் போது, அவனுடைய வாழ்க்கையும், சுபாவமும் அவனுக்கு அது ஆறுதல் தரும் இடமாக காட்சியளித்தது. அந்த மனிதனானவன், தனக்கு ஆறுதல் கிடைக்கும் என்று எண்ணி குறிப்பிடப்பட்ட அந்த உடன் சகோதரனை சந்தித்து பேச ஆரம்பித்தான். நாளடைவிலே அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டார்கள். சில மாதங்களுக்கு பின்னர், அந்த மனிதனானவன், தனக்கு ஆறுதல் கிடைக்கும் என்று எண்ணி, தான் அகப்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையை, குறிப்பிடப்பட்ட உடன் சகோதரனுக்கு எடுத்துக் கூறியதையிட்டு மிகவும் மனவருத்தம் அடைந்தான். ஏனெனில், குறிப்பிடப்பட்ட உடன் சகோதரனுடைய வாழ்க்கையும், அவன் சுபாவமுமோ, அவன் முன்பு காட்சியளித்தது போல ஆறுதலினிடமாக இருக்கவில்லை. இதுவும் ஒரு கானல் நீர் போன்ற காட்சி என்பதை உணர்ந்து கொண்டான்.

இன்று எங்கள் வாழ்க்கை எப்படி இருக்கின்றது என்பதை நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். செழிப்பாக வளர்ந்து வெளித் தோற்றத்திற்கு கவர்ச்சியாக காணப்படும் கனியற்ற அத்திமரம் போன்ற

வாழ்க்கை எங்களுக்கு ஆகாதது. எங்களைச் சூழ உள்ள மனிதர்கள் எங்கள் நற்சாட்சியான வாழ்வின் கனிகளைக் கண்டு, அதன் நிமித்தம், எங்களது பரம பிதாவை மகிமைப்படுத்தும்படிக்கு, அவருடைய பிள்ளை களாக அழைக்கப்பட்ட எங்களது வாழ்வு கனியுள்ளதாக அமைய வேண்டும்.

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று இயேசு கிறிஸ்து கூறியிரு க்கின்றார்.

உப்பினது பல பயன்பாடுகளைப் பற்றி நாங்கள் யாவரும் அறந்திருக்கி ன்றோம். ஆகாரங்களை கெட்டுப் போகாமல் பாதுகாக்கும் பொருளாக (preservative) இருப்பது அதன் தனிச்சிறப்புகளில் ஒன்று. உப்பானது அதன் தொழிற்பாட்டை நிறைவேற்றும்படி சாரமேற்றப்பட்டிருக்கின்றது. சார மற்ற உப்பு அதன் தொழிற்பாட்டை இழந்து போய்விடும். அதன் பின்னர் அதை எப்படி அழைத்தாலும், அது உபயோகமற்ற பொரு ளாகவே இருக்கும். அவ்வண்ணமாகவே ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவின் பண்புகளை இழந்து போகும் போது, அவனை எப்படி அழைத்தாலும், பிரயோஜனமற்ற மனிதனாக மாறிவிடுவான். கிறிஸ்துவின் ஆவி யில்லா தன் கிறிஸ்துவினுடையவனல்ல. (ரோமர் 8:9)

"நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொ டாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார் கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக் கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொ டுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியு ண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படி ப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்துபோம்." என்று இயேசு கூறியிருக்கின்றார். (யோவான் 15:1-6).

ஒருவன் தன்னை கிறிஸ்தவன் என்று கூறியும், அவன் கிறிஸ்துவில் நிலைத்திருக்காவிடின், அவன் கிறிஸ்துவின் பண்பையுடையவன் அல்ல. அவன் வாழ்க்கை சாரமற்ற உப்பைப் போல பயனற்றதாக இருக்கும். எனவே கிறிஸ்துவில் நிலைத்திருந்து அவரு டைய திவ்விய பண்புகளை உங்கள் வாழ்க்கையில் வெளிக்காட்டுங்கள்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28) என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். இயேசு கிறிஸ்துவி லிருந்த ஆவியை பெற்ற நாமும் அவரைப் போல மனத் தாழ்மையும் சாந்தமுமுள்ளவர்களாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். எங்கள் வாழ்க்கையில் இயேசு வெளிப்பட வேண்டும். எங்களை காணுவோர்,

இயேசுவின் சாயலை எங்களில் காண வேண்டும். அவரிடத்திலிருந்த நட் பண்புகள் எங்களிடத்திலே பெருக வேண்டும்.

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் மலையின்மேல் இருக் கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக் காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள் அப் பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும் என்று இயேசு கூறியிருக்கின்றார் (மத்தேயு 5:14-15). இருளான ஸ்தலத்தை பிரகாசிப்பிக்கின்ற தேவ ஒளியை பெற்ற நாங்கள், உலகத்தின் அந்கார கிரியைகளைக் கண்டு பின்வாங்கிப் போகாமல், பாதை தெரியாமல் அலையும் மனிதர்களுக்கு வெளிச்சமாக இருக்க வேண்டும். மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை உணராமல் மாண்டு கொண்டிருக்கும் மனிதர்களுக்கு, அவரின் அன்பை எங்கள் கிரியைகளின் வழியாக வெளிப்படுத்த வேண்டும்.

பிரியமானவர்களே, நீங்கள் தேவனை அறியாத அந்நியரும் பரதேசிக ளுமல்ல. பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டா ருமாயிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கின்றோம். உன்னதரின் நாமத்தை தரித்தவர்களாய் இருக்கின்றோம். தேவன் தங்கும் இடத்தில் ஆறுதல் உண்டு. எனவே, பரலோக யாத்திரிகளாக இளைப்படைந்து சோர்ந்து போயிருக்கும் யாவருக்கும் புத்துணர்ச்சியும் புதுபெலனும் உங்கள் வழியாக வெளிப்படட்டும். சோர்ந்திருப்போரை உற்சாகப்படுத்துங்கள். இளைப்படைந்தவர்களை தேவ வார்த்தையால் பெலப்படுத்துங்கள்.

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள். (எபேசியர் 6:18).

நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்க ளின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவரவர் உங்கள் ஸ்திரப்படுத்தி, திடப்படுத்தி வழிநடதிச் செல்வாராக.

**ஆமேன்!**

# நாங்கள் யாரைச் சார்ந்தவர்கள்?

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - 1 கொரிந்தியர் 16:13-16

நாங்கள் ஆராதிக்கும் தேவன் சர்வ வல்லமையுள்ளவராக இருக்கின்றார். தேவனே, உம்முடைய பரிசுத்தத்திற்கு முன்பாக யார் நிற்கக்கூடும்? உம்மைய வல்லமைக்கு எதிராக யார் நிலை நிற்பான்? ஒருவரும் நிற்க முடியாது! என்று சங்கீத புத்தகத்திலே வாசிக்கின்றோம். ஆனால் நாங்கள் அவர் முன்பாக நிற்க தகுதியுள்ளவர்களாகும்படிக்கு, தம்மு டைய மிகுந்த காருண்யத்தினால் எங்களை தம்மிடம் சேர்த்துக் கொண்டார்.

கொரிந்து என்னும் பட்டணத்திலுள்ள சபையிலே பிரிவினைகள் ஏற்பட்டிருந்தது. அதை குறித்து தேவ ஊழியராகிய பவுல் அவர்களுக்கு இவ்வண்ணமாக எழுதினார்: ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா? பவுல் யார்? அப்பொல்லோ யார்? இவர்களா உங்களுக்காக சிலுவையிலே அறையப்பட்டார்கள். இல்லை இவர்கள் கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள் அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்.

நாங்கள் எப்போதும் இயேசு கிறிஸ்துவை சார்ந்த ஜனங்களாக வாழ வேண்டும். தனக்கு இன்னும் சொற்ப காலம் தான் இருக்கின்றது என்று அறிந்திருக்கின்ற பிசாசானவன், கெர்ச்சிக்கின்ற சிங்கம் போல யாரை விழுங்கலாம் என்று சுற்றித் திரிகின்றான். எனவே, நீங்கள் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறிய பிரகாரமாக: சர்ப்பங்களப் போல வினாவுள்ளவர்களாக இருங்கள். அதாவது நாங்கள் பிசாசானவனுடைய வஞ்சனைக்கு அகப்படாதபடிக்கு, எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையைக் குறித்து எப்போதும் விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். பிசாசானவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.

ஏதேனிலே ஆதாமும் ஏவாளும் தேவனுடைய பிரசன்னத்திலே சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒன்றும் குறைவு படவில்லை. ஆனால் அந்த இடத்திலே பிசாசானவன் அவர்களுக்கு தவறான ஆலோசனையை கொடுத்தான். அவன் ஏவாளினிடத்திற்கு வந்து, தேவன் புசிக்க வேண்டாம் என்று விலக்கின கனியை நீங்கள் புசிப்பதால், நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள்

கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்று அவர்களுக்கு நன்மை செய்வதைப் போல பேசினான். அது போலவே இந்த நாட்களிலும் அவன் வஞ்சிக்கின்றவனாயிருக்கின்றான். அதாவது, தேவன் விலக்கின காரியங்களிலே மனிதர்களுக்கு நன்மை உண்டு, சந்தோஷம் உண்டு என்று கூறுகின்றான்.

எடுத்துக்காட்டாக, வாலிபர்களுடைய வாழ்க்கையிலே, வாலிபத்திலே உல்லாசமாக இருக்க வேண்டும் என்ற ஆலோசனை கூறுவான். இரட்சிப்படைந்த பின்பு இதை செய்வதில் என்ன தவறு? இயேசுவின் பிள்ளைகள் இப்படி செய்யக் கூடாது என்று எழுதியிருக்கின்றதா? என்று பலவிதமான கேள்விகளை அவர்களுடைய மனதிலே போடுவான். மேலும், "ஞாயிற்றுக் கிழமை வேலைக்கு சென்றால் என்ன? பாவமா?" என்று வஞ்சகமாக மனிதர்களுடைய வாழ்க்கையிலே நுழைகின்றான். ஆனால் கர்த்தரை சார்ந்து அவரை உறுதியாக பற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் தங்கள் நிலையை விட்டுத் தவறாமல் உறுதியாய் வாழ்கின்றார்கள்.

முதலாவதாக தேவனுடைய வார்த்தையை கனப்படுத்தும் இருதயம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் உருவாக வர வேண்டும். விழித்திருங்கள் என்று கூறுவதின் கருப் பொருளாவது, நீங்கள் உங்கள் வாழ்க்கையில் நடப்பிக்கும் ஒவ்வொரு காரியங்களைக் குறித்தும் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே. உதாரணமாக, உங்கள் வாழ்க்கையிலே புதிய ஒரு நண்பரை ஏற்றுக் கொள்ளுகின்றீர்கள் என வைத்துக் கொள்வோம். நண்பர்கள் வாழ்க்கையில் இருப்பது நல்லது. ஆனால் அந்த நட்பு தேவ காரியத்தைவிட்டு ஒரு போதும் உங்களை விலக்கிவிடாதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நல்லதொரு புதிய வேலை கிடைத்திருக்கின்றது. நல்லது! ஆனால் அந்த வேலையானது, நான் தேவனுடைய காரியங்களில் ஈடுபடுவதை தடை செய்துவிடுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் விலைறேப்பெற்ற இரத்தத்தினாலே கழுவப்பட்டு, இரட்சிப்பை பெற்ற நாங்கள், எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படும் ஆனந்த பாக்கியமுள்ள நாளை எதிர்பார்த்து ஓடிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் கற்றுக் கொண்டவைகளிலிருந்து விலகிப் போகாதபடிக்கு, எப்போதும் விழிப்புள்ள ஆத்துமாவாய், கிறிஸ்துவின் நாளை நோக்கி விசுவாசத்திலே நிலைத்திருக்க வேண்டும். நாங்கள் நினைத்த பிரகாரமாய் எங்கள் வாழ்க்கையை எங்கள் கொள்கைகளின் அடிப்படையில் வாழக் கூடாது. மாறாக, தேவனைச் சார்ந்த ஜனங்களாய் அவருடைய வார்த்தையின் படி நாங்கள் எங்கள் வாழ்க்கையை வாழ வேண்டும். எனவே, விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள். உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது.

**[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம். https://gtachurch.ca/im]**

# பூரண திட்டம்

ஒரு சிறு பையனானவன், அயலிலுள்ள தன் நண்பர்களோடு சேர்ந்து விளையாடுவதற்கு தன் தந்தையாரிடம் அனுமதி கேட்டான். தந்தையார் அவனை நோக்கி: நாளை காலை, பாடசாலை அனுமதிக்காக, உனக்கு ஒரு முக்கியமான நேர்முகத் தேர்வும், பரீட்சையும் உண்டு. எனவே, நீ இன்று இளைப்பாறி ஆயத்தப்பட வேண்டும். இன்று நீ விளையாட்டுக்குச் சென்று உன்னை காயப்படுத்திக் கொள்ள முடியாது என்றார். மகனானவனோ, அப்பா இப்படியாக எத்தனையோ தடவைகள் விளையாடச் சென்றிருக்கின்றேன், ஒன்றும் நடக்கவில்லையே என்று கூறினான். அவனுடைய ஆதங்கம் எல்லாம் இன்றைய நாளைக் குறித்ததாகவே இருந்தது.

**கொலோசெயர் 3:2**

**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைக ளையே நாடுங்கள்.**

ஆனால் தந்தையாரோ, தன் மகனின் வாழ்க்கையைக்குறித்து ஒரு பெரிதான திட்டம் தடைப்படக் கூடாது என்பதில் மிகவும் கவனமுள்ளவராக இருந்தார். அன்றைய தினத்திலே, தன் தந்தை தன்னை விளையாட அனுமதிக்காதபடியால் அவன் தன் தந்தை தன்னுடன் மிகவும் கடுமையாக நடந்து கொள்கின்றார் என்று எண்ணிக் கொண்டான். பிரியமானவர்களே, எங்கள் பரம பிதா, தம்முடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையைக் குறித்ததான ஒரு அழகான திட்டத்தை வைத்திரு க்கின்றார். ஆனால் சில பிள்ளைகளோ “இன்று என் வாழ்க்கை ஏன் இப்படியாக இருக்க வேண்டும்.” “நாளை ஏன் நாங்கள் இதை செய்ய வேண்டும்” என்று மேலே குறிப்பிடப்பட்ட சிறுபையனைப் போல எண்ணு கின்றார்கள். இப்படிப்பட்டவர்களுடைய நோக்கம் குறுகிய கால த்தின் சுகபோகங்களைக் குறித்ததாக இருக்கின்றது. மனிதனுடைய நாட்கள் இந்தப் பூமியிலே குறுகியதாக இருக்கின்றது. அந்த வாழ்க்கையின் பாதையிலே மனிதர்களுக்கு பல எதிர்பார்ப்புக்கள் உண்டு. அந்த எதிர்பார்ப்புக்கள் இந்தப் பூமிக்குரியதாக இருக்குமாயின், அவை யாவும் இந்த வாழ்க்கையோடு அழிந்து போய்விடும். ஆனால் எங்கள் பரம பிதாவின் திட்டம் நித்தியமானது. அது அழியாததும் மாசற்றதுமான பரலோக ராஜ்யத்திற்குரியது. பிதாவாகிய தேவன் தம்முடைய பிரதான திட்டம் நிறைவேறும்படிக்கு தம்முடைய குமாரனாகிய இயேசு வையே பலியாக ஒப்புக் கொடுத்து, அவர் வழியாக எங்களை தம்முடைய பிள்ளைகளாக்கிக் கொண்டார். எனவே, அவருடைய மேலான திட்டம் எங்களில் நிறைவேறும்படிக்கு பரலோகத்திற்குரியவைகளையே நாமும் வாஞ்சிப்போம்.

**ஜெபம்**: அநாதி ஸ்நேகத்தால் எங்களை நேசித்த தேவனே, என் வாழ்க்கையைக் குறித்ததான உம்முடைய திட்டம் என்னில் நிறைவேறும்படிக்கு நான் உணர்வுள்ள வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழுத்தும் பாரங்கள்

“நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.” என்று இயேசு கூறியிருக்கின்றார். அதாவது, இந்த உலகத்தின் போக்கின்படி தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றவர்கள், இந்த பூமிக்குரியவைகளை தங்களின் பிரதான நோக்கமாக வைத்து அவைகளையே நாடித் தேடுகின்றார்கள். அவைகளை அடையும்படிக்கு அயராது உழைக்கின்றார்கள். தாங்கள் நாடித் தேடுவதை அடைந்து கொள்ளும் போது அவைகளினால் திருப்த்தியடைகின்றார்கள். தாங்கள் அடைந்து கொண்ட உலகத்தின் பெருமையினால், அதை அடைந்து கொள்ளாத மற்றவர்கள் மதியற்றவர்கள் என எண்ணிக் கொள்கின்றார்கள். ஆனால் தாங்கள் அடைந்து கொண்ட திருப்த்தியானது கானல் நீரைப் போல சீக்கிரத்தில் மறைந்து போய்விடும் என்பதை உணராதிருக்கின்றார்கள். இவர்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்தின் அளவுகோல் இந்த உலகத்திற்குரியவைகள். நாங்களும் அவ்வண்ணமாகவே வாழ்ந்து வந்தால், இந்த உலக போக்கின்படி வாழ்பவர்களால் அங்கீகரிக்கப்படுவோம். ஆனால் எங்கள் பிதாவாகிய தேவன் தாமே, தம்முடைய குமாரனாகிய கிறிஸ்து வழியாக, எங்களை இந்த உலகத்தின் போக்கிலிருந்து வேறு பிரிந்த வாழ்க்கை வாழும்படிக்கு பிரித்தெடுத்தார். இயேசுவின் நாமத்திலே நாங்கள் பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ, அதை பிதாவாகிய தேவன் எங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நாங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், எங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் இயேசு கிறிஸ்துதாமே எங்களை ஏற்படுத்தியிருக்கின்றார். பிரியமானவர்களே, நீங்கள் இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்லும் போது, இந்த உலக போக்கின்படி வாழ்பவர்கள் உங்களை பகைத்தால் அதைக் குறித்து ஆச்சரியப் படாதிருங்கள். உங்களைச் சூழ உள்ளவர்களின் அழுத்தத்தினால் (peer pressure) இந்த உலகத்தின் இச்சைகளுக்கு இடங்கொடாதிருங்கள். பிதாவின் அன்பில் நிலைத்திருங்கள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

**1 யோவான் 2:17**

**உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.**

**ஜெபம்**: இந்த உலகத்தால் உண்டாகும் அழுத்தங்களினால் என் அழைப்பையும் அதன் மேன்மையையும் மறந்து போய்விடாமல், பந்தையப் பொருளின் அழைப்பை நோக்கி தொடர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிலையான வாக்குத்தத்தம்

பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது. அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள் அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம் என்று தேவ ஊழியராகிய யோவான் கூறியிருப்பதை இறுதிவரைக்கும் மறந்து போய்விடாதிருங்கள். நீங்கள் அறிந்து கொண்ட சத்தியத்தை இறுகப்பற்றிக் கொள்ளுங்கள். இயேசுவே கிறிஸ்து என்பதே அந்த சத்தியம். இயேசு வழியாகவே பாவத்திலிருந்து மீட்பு உண்டானது. இயேசு வழியாகவே ஒருவன் பிதாவினிடத்திற்கு செல்ல முடியும். இயேசுவிலே நாங்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கின்றோம். இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. அந்திக்கிறிஸ்துகள் உங்களிடம் நேரடியாக வந்து, இயேசு கிறிஸ்து அல்ல என்று கூறப்போவதில்லை. அந்திக்கிறிஸ்துவின் ஆவிகள் உங்களை வஞ்சிக்கும்படிக்கு, தந்திரமான உபதேசங்களைக் உங்களுக்கு கூறுவார்கள். அந்த உபதேசமாவது, உங்களை இயேசு கிறிஸ்துவை விட்டு தூரப்படுத்துகின்றதாயிருக்கும். நாங்கள் யாவரும் திராட்சை செடியாகிய இயேசு கிறிஸ்துவிலே ஒட்டப்பட்ட கிளைகளாய் இருக்கின்றோம். அந்த பிணைப்பை உடைத்துப் போடுவதே அந்திக்கிறிஸ்துகளின் தந்திரம். என்னிடத்தில் வாருங்கள் என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்க, இன்று பலர், இயேசு கிறிஸ்துவிடம் நேரடியாக செல்வதற்கு பதிலாக வேறு வழிகளையும், வேறு மனிதர்களையும், இந்த உலக பொருட்களையும் தேடுகின்றார்கள். இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல்தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள். இயேசுவின் நாமத்தினாலே நீங்கள் பெற்ற தேவ ஆவியினுடைய அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, அந்த சத்திய ஆவியானவர் சகலத்தையுங்குறித்து உணர்த்தி வழிநடத்துகின்றார். நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். அந்த வாக்குத்தத்தத்தில் உறுதியாக நிலைத்திருங்கள். இயேசு கிறிஸ்துவை பற்றிக் கொள்ளுங்கள்.

**1 யோவான் 2:25**

**நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.**

**ஜெபம்**: காருண்யம் நிறைந்த தேவனே, வாழ்வின் பின்னடைவுகளைக் கண்டு நான் சோர்ந்து போய்விடாதபடிக்கு, உம் அன்பின் ஆழத்தை உணர்ந்து உம்மண்டை சேர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சுதந்திரத்தில் பங்கடையும் நாள் வரைக்கும்

ஒரு பண்ணையின் உரிமையாளர் தூர தேசத்திற்குச் செல்ல வேண்டி இருந்ததால், தன்னுடைய மகனை அழைத்து, தான் திரும்பி வரும்வரை பண்ணையின் விவகாரங்களை கவனிக்கும்படியான பொறுப்பை அவனிடம் கொடுத்தார். தந்தையார் தேசத்திலே இல்லாத நாட்களிலே, அவன் அந்த பண்ணைக்கு சுதந்தரவாளியாக இருந்த போதிலும், தந்தையார் வீடு திரும்பும் போது தான் செய்த கிரியைகளைப் பார்த்து அவர் ஆச்சிரியப்பட்டு மகிழ்ச்சியடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் தந்தை தன்னிடம் கொடுத்த பொறுப்பை நிறைவேற்றும்படி உத்தம ஊழியனாக இருந்து, வெயிலிலும் மழையிலும், குளிரிலும் கடுமையாக உழைத்து வந்தான். எதிர்பாராத நாளிலே, தந்தையார் வீடு திரும்பிய போது, தன்னுடைய மகனுடைய பொறுப்புணர்வையும், கடும் உழைப்பையும் கண்டு ஆச்சரியப்பட்டு பெரும் மகிழ்ச்சியடைந்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, பிதாவாகிய தேவன், இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் இயேசு கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார் கிருபையினாலே இரட்சிப்பை பெற்றுக் கொண்டோம். எம்மைத் தம்முடைய மகனாக மகளாக தெரிந்து கொண்டார். அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை எங்கள் இருதயங்களில் அனுப்பினார். நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். அவருடைய பிள்ளைகளாகிய நாங்கள் கிறிஸ்துவுடனே கூட பரலோக ராஜ்யத்தின் உடன் சுதந்திரர்களாக இருக்கின்றோம். எனவே தேவன் குறித்த காலம் நிறைவேறும்வரைக்கும் அவர் எங்களை நம்பி, தந்த பொறுப்பை செய்து வருகின்றோம். தன் தந்தையின் பண்ணையை நன்றாக விசாரித்து வந்த நல்ல மகனைப் போல, நாங்களும் உத்தம ஊழியர்களாகவும் நல்ல உக்கிராணக்காரர்களாயும், எல்லா சூழ்நிலைகளிலும் எங்கள் பொறுப்பை நிறைவேற்றி முடிக்கின்றவர்களாக வாழ வேண்டும். கர்த்தருடைய நாளிலே, அவர் எங்கள் வாழ்க்கையைக் குறித்து பெரும் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்கின்ற எண்ணம் எங்களில் ஒவ்வொரு நாளும் பெரு வேண்டும்.

**1 யோவான் 3:1**

**நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்;**

**ஜெபம்**: பரலோக பிதாவே, நீர் உம்முடைய பிள்ளைகளுக்கு முன் குறித்த சுதந்திரத்தில் நான் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் நீர் தந்த பொறுப்பை நிறைவேற்றி முடிக்கத் தக்கதாக என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசுவின் சிநேகிதர்கள்

ஒரு மனிதனானவன், பல ஆண்டுகளாக தனது நண்பனைக் கண்டவுடன், பலர் முன்னிலையில், தன் கைகளை நண்பனின் தோள்மீது போட்டு கொண்டு "இவன் என்னுடைய தோழன், என் உயிர் நண்பன்" என்று தோழமை கொண்டாட ஒரு போதும் தயங்குவதில்லை. ஆனால், அந்த மனிதனானவன், தன் நண்பனுக்கு நம்பிக்கை துரோகம் செய்து வந்தான். ஒரு தடவையல்ல பல தடவைகள் இவ்வண்ணமாக, மனிதர்கள் முன்னிலையில் தோழமை கொண்டாடுவதும், பின்பு நண்பனுக்கு எதிராக செயற்படுவதும் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஒரு நாள் அந்த மனிதனானவன், தன் நண்பனை கண்டதும், வழமையாக செய்வது போல, தன் கையை நண்பனின் தோளின்மீது போட்டு, நண்பா சுகமாக என்று கேட்டான். பல ஆண்டு காலமாக பொறுமையாக இருந்த நண்பன், மறுமொழியாக: நண்பா என்று நீ என்னை அழைத்தால், நீ ஒரு நண்பனைப் போல நடந்து கொள்ள வேண்டும். இக்கட்டும் நெருக்கமும் சூழும் போது உண்மையான நண்பர்கள் தங்கள் நட்பை, நற்கிரியைகள் வழியாக வெளிக்காட்டுவார்கள் என கூறினான். ஒரு சமயம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை நோக்கி: இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன் என்று கூறினார். சற்று சிந்தித்து பாருங்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாங்கள், தேவனுடைய வீட்டாராக இருந்து அவர் தந்த பொறுப்பை (ஊழியத்தை) நிறைவேற்றுகின்றோம். அந்த சிலாக்கியம் மட்டுமல்ல, இயேசு எங்களை தம் நண்பர்களாக கருதி தாம் அறிந்த இரகசியங்களை எமக்கு வெளிப்படுத்துகின்றார். இந்த நட்பு எதற்கு? மேலே குறிப்பிடப்பட்ட மனிதனைப் போல முகஸ்துதி செய்வதற்காகவா? இயேசு என்னுடைய தோழன் எனவே நான் எதையும் செய்வேன் என்று துணிகரம் கொள்வதற்காகவா? இல்லை. பிரியமானவர்களே, ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. சிநேகிதராகிய இயேசு தம்முடைய உயிரை எங்களுக்காக கொடுத்தார். நாங்கள் அவருடைய சிநேகிதராக இருந்தால், அவருடைய சித்தத்தை எங்கள் வாழ்வில் நிறைவேற்றுகின்றவர்களாக வாழக்கடவோம்.

**யோவான் 15:14**

நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்.

**ஜெபம்**: எங்களை நேசிக்கின்ற தேவனே, இத்தனை மகத்துவமுள்ள பதவியை தகுதியற்ற எங்களுக்கு கொடுத்திருக்கின்றீர். உம் அன்பை உணர்ந்து கொள்ளும் இருதயத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சிநேகிதர்கள் யார்?

*சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான். (நீதி 17:17). என்ற வார்த்தைக்கு அமைய கர்த்தராகிய இயேசு எக்காலத்திலும் எங்களை சிநேகிக்கின்றார். உத்தம மார்க்கத்தில் நடக்கின்றவன் தன் தோழனுக்கு தீங்கு நினைக்க மாட்டான். (சங் 15:3). அது போல உத்தமராகிய இயேசு எப்போதும் எங்களுக்கு நன்மை செய்கின்றவராகவே இருக்கின்றார். சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள் சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள். (நீதி 27:6). உண்மையான சிநேகிதனிடத்தில் வஞ்சனை இல்லை. அவன் தன் சிநேகிதனுடைய நன்மை கருதி, எப்போதும் தன் சிநேகிதனிடம் உண்மையை பேசுகின்றான். சிநேகிதனுடைய கடிந்து கொள்ளுதல் நன்மைக்குரியது. அது போலவே எங்கள் இயேசுவும் எங்களை நேசிக்கின்றார். இயேசுவை குறித்ததான எங்கள் சிநேகம் எப்படி இருக்கின்றது? செழிப்பான காலங்களிலே சிநேகிதன் என்றும், நெருக்கடியான வேளையிலே அவருடைய சிநேகத்தை மறந்து போகின்றவர்களாக இருக்கின்றோமா? யூதா ஸ்காரியோத் என்னும் மனிதன் இயேசுவோடு கூட இருந்த நெருங்கிய பன்னிரண்டு சீஷர்களில் ஒருவனாக இருந்தான். அந்நாட்களிலே இயேசுவை கைது செய்யும்படிக்கு யூத அதிகாரிகள் வகை தேடித்திரிந்தார்கள். யூதா ஸ்காரியோத், இயேசுவின் சிநேகத்தை மறந்து அந்த அதிகாரிகளுடன் உடன்படிக்கை பண்ணிக் கொண்டான். தன் சிநேகிதனை காட்டிக்கொடுப்பதற்குத் தகுந்த சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். குறித்த நாள் வந்தபோது, கர்த்தராகிய இயேசு தாம் செல்ல வேண்டிய பாதையை குறித்து திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார். என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது என கூறினார். அந்த இராத்திரியிலே யூதா ஸ்காரியோத் கர்த்தரை ரபீ என்று அழைத்து, முத்தமிட்டு காட்டிக் கொடுத்தான். அன்பான சிநேகிதனுக்கு வஞ்சனையான முத்தத்தை கொடுத்தான். இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார். (மத் 26:50). இன்று நாங்கள் எங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். உயர்வான நேரத்திலும், தாழ்வான நேரத்திலும், அன்பரின் சிநேகத்தை மறந்து புத்தியீனமாக அவருடைய வார்த்தைகளுக்கு எதிராக துரோகம் செய்யாமல், அவருக்கு உண்மையான சிநேகிதராக நாங்கள் வாழ வேண்டும்.*

**நீதிமொழிகள் 27:6**

**சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, வாழ்க்கையிலே நெருக்கங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, இயேசுவின் சிநேகத்தை மறந்து, தேவ வார்த்தைக்கு எதிராக துரோகம் செய்யாதபடிக்கு எங்களை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெரிதான சிலாக்கியம்

ஒரு தேசத்தை ஆண்டு வந்த ராஜா, வருடாவருடம் தன்னுடைய ராஜ்ய த்தின் ஆண்டு விழா அன்று, குடியுரிமையில்லாமல் தன் தேசத்தில் வாழும் மக்களில் சிலருக்கு குடியுரிமையை வழங்குவது வழக்கமாக இருந்தது. பொதுவாக இந்த உரிமையானது குறிப்பிட்ட அந்நிய ஜன ங்களின் தகுதிகள் மற்றும் அவர்களின் அந்தஸ்தின் அடிப்படையி லேயே கொடுக்கப்பட்டு வந்தது. அவ்வண்ணமாக உரிமையை பெற்ற வர்கள் அந்த தேசத்திலே ஒரு சாதாரண குடிமக்களாகவே இருப்பார் கள். ஆனால் எங்களுக்கு கிடைத்த குடியுரிமையின் மேன்மையை சற்று எண்ணிப் பாருங்கள். நாங்கள் அந்த கார பிசாசானவனுடைய ராஜ்யத்திற் குட்பட்டவர்களாக இருந்து வந்தோம். அந்த அந்தகார இருளின் அதிகார த்திலிருந்து, தம்முடைய நிலையான ராஜ்யத்திற்கு பங்காளிகளாக தேவா தி தேவன் எங்களை அழைத்திரு க்கின்றார். இந்த உலகிலே குடியுரி மைகள் தகுதியின் அந்தஸ்தின் அடி ப்படையிலே கொ டுக்கப்படுகின்றது. அந்த உரிமையை பெறுவதற்கு ஒரு விலை (கிரயம்) கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அழியாத தேவ னுடைய ராஜ்யத்தின் குடியுரிமையை அழிந்து போகின்ற இந்த உலகத்தின் தகுதிகளினாலும் அந்தஸ்தினாலும் பெற்றுக் கொள்ள முடியாது. நமக்கோ, தேவனுடைய கிருபையினாலே இந்த மேன்மை உண்டானது. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவா சிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடை யும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர் ந்தார். குமாரனாகிய இயேசு கிறிஸ்து வழியாக எங்களை தம்முடைய பிள்ளைகளாக மாற்றி, கிறிஸ்துவிலிருந்த ஆவியை எங்களுக்கு கொடு த்திருக்கின்றார். கிறிஸ்து வழியாக நாங்கள் **தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியானோம்**. பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவோடே தேவனுடைய துதியை சொல்லும் **ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும்** ஏற்படுத்தப்பட் டிருக்கின்றோம். கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்களற சுத்திகரிக் கப்பட்டு **பரிசுத்த ஜாதியாக்கப்பட்டிருக்கின்றோம்**. தேவனுக்கென்று வேறு பிரிக்கப்பட்ட அவருடைய **சொந்த ஜனங்கள்** ஆக்கப்பட்டோம். இத்தனை பெரிய அழைப்பை பெற்ற நாங்கள் இதை அற்பமாக எண் ணாதபடி க்கு, இந்த அழைப்பு எங்களில் நிறைவேறும்படிக்கு பிரயாசப்படுவோம்.

**1 பேதுரு 2:9**

தெரிந்துகொள்ளப்பட்ட சந் ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவ ருக்குச் சொந்தமான ஜன மாயும் இருக்கிறீர்கள்.

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, அற்பமான என்னை உம் முடைய ராஜ்யத்திற்கென்று பிரித்தெடுத்தீர். அந்த மேன்மையான அழை ப்பை உணர்ந்து வாழும்படி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வான வருடைய சாயல்

இயேசு இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களிலே, யூத ஜனங்கள் மத்தியிலே, சதுசேயர் என்ற மதப் பிரிவினர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிறவர்களாயிருந்தார்கள். ஒரு சமயம் அவர்கள் இயேசுவிடம் வந்து, போதகரே, ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க வேண்டும் என்று மோசே சொன்னாரே. எங்களுக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்தார்கள் மூத்தவன் விவாகம்பண்ணி, மரித்து, சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுவிட்டுப் போனான். அப்படியே இரண்டாம் மூன்றாம் சகோதரன் முதல் ஏழாம் சகோதரன்வரைக்கும் செய்தார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். ஆகையால், உயிர்த்தெழுதலில், அவ்வேழுபேரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்கள் எல்லாரும் அவளை விவாகம்பண்ணியிருந்தார்களே என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள். தேவன் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார் என்றார். மனிதர்களுகடைய அறிவு இந்த மண்ணுக்குரியது. மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதில்லை. மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே. வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம். பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். வாக்குரைத்த தேவன் அதை நிறைவேற்றி முடிப்பார்.

**1 கொரிந்தியர் 15:49**

**மேலும் மண்ணானவனுடையசாயலைநாம் அணிந்திருக்கிறதுபோல, வான வருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.**

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, இனி வரவிருக்கும் பரலோக மேன்மையை குறித்து சந்தேகப்படாமல், என் விசுவாசக் கண்களால் நான் காணும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மணவாளன் வருகிறார்

இந்த உலகிலே மணவாளன், மணவாட்டி, திருமணம் என்ற பதங்களை பற்றி பேசும் போது, முதலாவதாக சரீர பிரகாரமான உறவுகளை குறித்த எண்ணமே மனிதர்களின் மனதிலே உண்டாகின்றது. ஏனெனில், மண்ணானவன் மண்ணுக்குரியபடி சிந்திக்கின்றான். பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான். ஒரு மனிதனானவன், இயேசு கிறிஸ்து வழியாக மீட்பை பெற்று, ஞானஸ்நானத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்து, தூய வாழ்க்கை வாழும்படிக்கு ஒரு சபையிலே இணைந்து கொள்கின்றான். இவ்வாறாக இந்த பூமியிலே அநேகமாயிரம் சபைகளும் அதிலே கோடிக் கணக்கான அங்கத்தவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், அந்த சபைகளிலுள்ள ஆத்துமாக்களில் தேவசித்தத்தை தங்கள் வாழ்வில் நிறைவேற்றுகின்றவர்கள் யாவரும் தேவனுடைய திருச்சபையிலே இசைந்த ஆத்துமாக்களாய் இணைக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்த ஆத்துமாக்கள் தேவனுடைய மணவாட்டி சபை என்று அழைக்கப்படுகின்றார்கள். பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள், எண்ணெயையோ கூடக்கொண்டு போகவில்லை. ஆயத்தமாக, விழிப்புடன் இருந்த புத்தியுள்ள 5 கன்னிகைகளும் இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தமுள்ள மணவாட்டி சபைக்கு ஒப்பாயிருக்கின்றார்கள். இந்த மணவாட்டி சபையானது மண வாளனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமானது. இந்த ஐக்கியம் இந்த பூமிக்குரியதல்ல. இந்த ஐக்கியம் தேவனுடைய ராஜ்யத்திற்குரியது. மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே மணவாட்டி சபையின் ஆத்ம நேசராக இருப்பார். தன்னுடைய மணவாட்டி சபையை மீட்டுக் கொள்ளும்படிக்கு தன் உயிரையே தியாகம் செய்த மீட்பராக அவர் இருக்கின்றார். அவருடைய சமுகம் பேரின்பமானது. அவர் சமுகத்தில் சஞ்சலமும் தவிப்பும் ஓய்ந்து போகும். இத்தகைய அழைப்பைப் பெற்ற நாங்கள், நினையாத நேரம் வரவிருக்கும் எங்கள் ஆத்தும நேசராகிய இயேசுவை எதிர்கொண்டு போகும்படிக்கு ஆயத்தமுள்ளவர்களாக இருப்போம்.

**மத்தேயு 25:6**

நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

**ஜெபம்**: பிதாவாகிய தேவனே, இத்தகைய மேன்மையான அழைப்பை நீர் எங்களுக்கு தந்ததிற்காக நன்றி. புத்தியுள்ள கன்னிகைகளைப் போல கறைதிரையற்றவர்களாக உம்முன் நிற்க எங்களை வழிநடத்துவீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பின் கிரியைகள்

கடந்த சில நாட்களாக பிதாவாகிய தேவன் எங்கள் மேல் பாராட்டிய அன்பையும், எங்களுக்கு கொடுத்திருக்கும் மேன்மையையும் தியானம் செய்தோம். அவருடைய பிரியமுள்ள பிள்ளைகளாக, பெற்ற பொறுப்பை நிறைவேற்றும் ஊழியர்களாக, முறுமுறுப்பில்லாத நல்ல போர்ச் சேவகர்களாக, கடமையுணர்வுள்ள உக்கிரணக்காரர்களாக, தம்முடைய மேய் ச்சலின் ஆடுகளாக, தெரிந்துகாள்ளப்ட்ட சந்ததியாக, ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாக, கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்களற சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த ஜாதியாக, தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்ட அவருடைய சொந்த ஜனங்களாக, இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக அழைப்பைப் பெற்றிருக்கின்றோம். இந்த அழைப்பை சிந்தித்துப் பாருங்கள். பொதுவாக பிள்ளைகளுகடைய பொறுப்பு என்ன? ஊழியர்களுடைய பொறுப்பு என்ன? போர்சேவகனுடைய பொறுப்பு என்ன? உக்கிரணக்காரனுடைய பொறுப்பு என்ன? மணவாட்டியினுடைய பொறுப்பு என்ன? இவை ஒவ்வொன்றிலும் ஒரு மேன்மையான அழைப்பும், பொறுப்பும், ஐக்கியமும் உண்டல்லவோ! ஒருவன் கடமைக்காக கணவனாக இருந்தால் அதை குறித்து மனைவி என்ன சொல்லுவாள்? அல்லது ஒரு ஸ்திரி கடமைக்காக மனைவியாக இருந்தால் அவளின் கணவன் அதில் பிரியமாக இருப்பானோ? ஒரு வேளை இந்த பூமியிலே அத்தகைய உறவுகளும், ஐக்கியங்களும் அங்கீகரிக்கப்படலாம். ஆனால், தேவனோடுள்ள ஐக்கியமாகுதலின் மையப்பொருள் அன்பாக இருக்கின்றது. நான் என்னை எப்படியாகவும் அழைத்துக் கொள்ளலாம். அதாவது, தேவனுடைய பிள்ளை, ஊழியன், போர்ச்சேவகன், உக்கிரணக்காரன், தேவனுடைய மந்தை, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக் கூட்டம், பரிசுத்த ஜாதி, தேவனுக்கு சொந்தமான ஜனம், கிறிஸ்துவின் மணவாட்டி சபை என்று தேவன் எங்களுக்கு கொடுத்த தகுதிகளை வரிசைப்படுத்தலாம். ஆனால், தேவ அன்பு ஒருவனிடம் இல்லாதிருந்தால் அவன் தேவனை இன்னும் அறிய வேண்டிய பிரகாரமாக அறியவில்லை. “பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம் ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான் தேவன் அன்பாகவே இருக்கிறார்.”

**1 யோவான் 3:18**

**என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.**

**ஜெபம்**: அன்பாகவே இருக்கின்ற தேவனே, நீர் எனக்கு தந்த தகுதிகளை நாவினால் அறிக்கையிடுவதுடன் நிறுத்திவிடாமல், உண்மையான அன்புள்ள கிரியைகளை காண்பிக்கவும் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆறுதல் வலையம்

ஒரு ஊழியர், தான் இருக்கும் ஊரிலிருந்து வெகு தொலைவிலுள்ள ஒரு கிராமத்திற்கு, கால்நடையாக சென்று கொண்டிருந்தார். வெய்யி லின் காங்கை அதிகமாக இருந்தது, அவர் நடந்து செல்லும் பாதையோ கரடுமுரடாக இருந்தது. வழியிலே, சற்று ஒதுங்கி ஓய்வெடுப்பதற்கும் மரங்களோ அல்லது மறைவுகள் ஏதும் இருக்கவில்லை. பல மைல்கள் சென்ற பின்பு, போகும் வழியிலே ஒரு எளிமையான குடிசை வீடு தென்பட்டது. அந்த வீட்டிலிருந்தவர் கள், "தெரு வழியாக நடந்து செல்லும் அந்த ஐயா மிகவும் களைத்தி ருகின் றாரே" என்று கூறி, அவரை தங்கள் வீட்டிற்கு கூப்பிட்டு, தாகத்திற்கு தண் ணீர் கொடுத்தார்கள். தங்களிடம் இரு ந்த கொஞ்ச உணவையும், அந்த ஊழியருக்கு பகிர்ந்து கொடுத்தார்கள். பயணக் களைப்பால், இளைப்படை ந்திருந்த அந்த வயதான ஊழியருக்கு பெரும் ஆறுதலாக இருந்தார்கள். சற்று தரிந்திருந்து, களைப்பு ஆறிய பின்பு, அந்த வீட்டாரை மனதார ஆசீர்வதித்து, தான் செல்ல வேண்டிய கிராமத்தை நோக்கி தன் பயணத்தை மீண்டும் தொடர்ந்தார். இவ்வண் ணமாகவே, எங்கள் இல்லங்களும் உள்ளங்களும் ஆறுதலின் இடமாக இருக்க வேண்டும். இந்த உலகிலே, மனிதர்களுடைய வாழ்க்கையில் நாளாந்த பழு மிகவும் அதிகமாக இருக்கின்றது. பரலோகத்தை நோக்கி பிரயாணப்படுக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் பல உபத்திரவங்க ளையும், சவால்களையும் சந்திக்கின்றார்கள். இதனால் பலர் இளைத்து சோர்வடைந்து போகின்றார்கள். அவர்கள் தரித்து இளைப்பாறுவதற்கு இடங்களை தேடுகின்றார்கள். கானகப் பாதையிலே இஸ்ரவேல் ஜன ங்கள் கானானை நோக்கி சென்று கொண்டிருப்பதைப் போல, நாங்கள் தாபரிக்கும் ஊராகிய பரம தேசத்தை நோக்கி சென்று கொண்டிருக்கி ன்றோம். எனவே ஒருவர் சுமையை ஒருவர் இன்னும் கூட்டி விடாமல், ஒருவரை ஒருவர் தாங்கி, ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்து கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த வேண்டும். அந்த வயதான ஊழி யருக்கு ஆறு தலாக இருந்த அந்த ஏழைக் குடிலிலுள்ளவர்களைப் போல எங்கள் பேச்சுகள், செய்கைகள் யாவும் மற்றவர்களை உறுதி யூட்டுகின்றதாக மாற வேண்டும். இளைத்துப் போன ஆத்துமாக்க ளுக்கு, ஆறுதல் அளி த்து, புத்துணர்ச்சியை கொடுக்கும்படிக்கு எங்கள் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமானதாக மாற வேண்டும்.

**கலாத்தியர் 6:2**

**ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறி ஸ்துவினுடைய பிரமா ணத்தை நிறைவேற்றுங் கள்.**

**ஜெபம்**: மேன்மையான அழைப்பைத் தந்த தேவனே, இந்த உலகிலே வாழும் நாட்களிலே, நீர் தந்த பெலத்தின்படி, நான் மற்றவர்களுக்கு ஆறுதல் அளிப்பவனா(ளா)க வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | ஐப்பசி 12

📖 மாலை வாசகம் – மத்தேயு 6:1–8

# பிரகாசிக்கும் சுடர்கள்

கானகப் பாதை வழியாக தன் ஒட்டகத்துடன் சென்று கொண்டிருந்த மனிதன், தொலைவிலே தண்ணீர் தடாகம் ஒன்றை கண்டான். தன் தாகத்தை தீர்த்து, இளைப்பாறும்படிக்கு மகிழ்ச்சியுடன் அந்த தண்ணீர் தடாகத்தை நோக்கி விரைந்து சென்றான். அவன் சற்று அருகில் வந்த போது, அது ஒரு கானல் நீர் என்பதை உணர்ந்து கொண்டான். இவ்வண்ணமாகவே இன்று சில மனிதர்களுடைய வாழ்க்கையும் இருக்கின்றது. தன் வாழ்க்கையில் பல இன்னல்களும் துன்பங்களும் சூழ்ந்திருக்கும் வேளையிலே ஒரு மனிதனானவன், தனக்கு ஆறுதல் கிடைக்கும் இடத்தை தேடி அழைந்தான். ஒரு உடன் சகோதரனுடைய வாழ்க்கையை பார்க்கும் போது, அவனுடைய வாழ்க்கையும், சுபாவமும் அவனுக்கு அது ஆறுதல் தரும் இடமாக காட்சியளித்தது. அந்த மனிதனானவன், தனக்கு ஆறுதல் கிடைக்கும் என்று குறிப்பிடப்பட்ட உடன் சகோதரனை சந்தித்து பேச ஆரம்பித்தான். நாளடைவிலே அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டார்கள். சில மாதங்களுக்கு பின்னர், அந்த மனிதனானவன், தனக்கு ஆறுதல் கிடைக்கும் என்று தன் சூழ்நிலையை, குறிப்பிடப்பட்ட உடன் சகோதரனுக்கு எடுத்துக் கூறியதையிட்டு மிகவும் மனவருத்தம் அடைந்தான். ஏனெனில், குறிப்பிடப்பட்ட உடன் சகோதரனுடைய வாழ்க்கையும், அவன் சுபாவமுமோ, அவன் முன்பு காட்சியளித்தது போல ஆறுதலினிடமாக இருக்கவில்லை. இதுவும் ஒரு கானல் நீர் போன்ற காட்சி என்பதை உணர்ந்து கொண்டான். பிரியமானவர்களே, இன்று எங்கள் வாழ்க்கை எப்படி இருக்கின்றது என்பதை நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். செழிப்பாக வளர்ந்து வெளித் தோற்றத்திற்கு கவர்ச்சியாக காணப்படும் கனியற்ற அத்திமரம் போன்ற வாழ்க்கை எங்களுக்கு ஆகாதது. எங்களைச் சூழ உள்ள மனிதர்கள் எங்கள் நற்சாட்சியான வாழ்வின் கனிகளைக் கண்டு, அதன் நிமித்தம், எங்களது பரம பிதாவை மகிமைப்படுத்தும்படிக்கு, அவருடைய பிள்ளைகளாக அழைக்கப்பட்ட எங்களது வாழ்வு கனியுள்ளதாக அமைய வேண்டும். இருள் சூழ்ந்த இந்த உலகித்திலே நாம் பிரகாசிக்கும் சுடர்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றோம். எனவே அன் போடு மற்றவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி வீசக்கடவோம்.

**மத்தேயு 5:16**

**இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.**

**ஜெபம்**: உம்முடைய மகிமையின் ஒளியை எங்களில் பிரகாசிப்பிக்க பண்ணிய தேவனே, பார்வைக்கு செழிப்பான வாழ்க்கையை வாழாமல், உண்மையுள்ள கனிகொடுக்கும் வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# புதிதும் ஜீவனுமான வாழ்க்கை

உப்பினது பல பயன்பாடுகளைப் பற்றி நாங்கள் யாவரும் அறந்திருக்கின்றோம். ஆகாரங்களை கெட்டுப் போகாமல் பாதுகாக்கும் பொருளாக (preservative) இருப்பது அதன் தனிச்சிறப்புகளில் ஒன்று. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே, தம்முடைய சீஷர்களை நோக்கி: நீங்கள் இந்த பூமிக்கு உப்பாக இருக்கின்றீர்கள் என்று கூறியிருக்கின்றார். உப்பானது அதன் தொழிற்பாட்டை நிறைவேற்றும்படி சாரமேற்றப்பட்டிருக்கின்றது. சாரமற்ற உப்பு அதன் தொழிற்பாட்டை இழந்து போய்விடும். அதன் பின்னர் அதை எப்படி அழைத்தாலும், அது உபயோகமற்ற பொருளாகவே இருக்கும். அவ்வண்ணமாகவே ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவின் பண்புகளை இழந்து போகும் போது, அவனை எப்படி அழைத்தாலும், பிரயோஜனமற்ற மனிதனாக மாறிவிடுவான். கிறிஸ்துவின் ஆவியில்லாதன் கிறிஸ்துவினுடையவனல்ல. "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார் கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்துபோம்." என்று இயேசு கூறியிருக்கின்றார். ஒருவன் தன்னை கிறிஸ்தவன் என்று கூறியும், அவன் கிறிஸ்துவில் நிலைத்திருக்காவிடின், அவன் கிறிஸ்துவின் பண்பையுடையவன் அல்ல. அவன் வாழ்க்கை சாரமற்ற உப்பைப் போல பயனற்றதாக இருக்கும். எனவே கிறிஸ்துவில் நிலைத்திருந்து அவருடைய திவ்விய பண்புகளை உங்கள் வாழ்க் கையில் வெளிக்காட்டுங்கள்.

**மத்தேயு 5:13**

**நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்?**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, கர்த்தராகிய இயேசுவில் நிலைத்திருந்து, உம்முடைய ராஜ்யத்திற்கு பயனுள்ள கருவியாய் இந்த பூவுலகிலே கிரியைகளை நடபிக்க பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | ஐப்பசி 14

📖 மாலை வாசகம் – யாக்கோபு 4:6

# பாவத்திலிருந்து விடுதலை

சமஸ்த இஸ்ரவேலை ஆளுகை செய்து வந்த தாவீது ராஜா, பெரிதான பாவத்தில் அகப்பட்டுக் கொண்டார். தான் ஆளுகை செய்யும் ராஜ் யத்திலே, எதையும் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் இருந்தது. எவ ரும் அவருக்கு எதிர்த்து நிற்க முடியாது. ஆனால், கர்த்தர் நாத்தான் என்னும் தீர்க்கதரிசியை தாவீதினிடத்தில் அனுப்பினார். நாத்தான் தாவீதை நோக்கி: ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள், ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரி த்திரன். ஐசுவரியவானுக்கு ஆடு மாடு கள் வெகு திரளாயிருந்தது. தரித்திர னுக்கோ தான் கொண்டு வளர்த்த ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டியைத்த விர வேறொன்றும் இல்லாதிருந்தது. அது அவனோடும் அவன் பிள்ளைக ளோடுங்கூட இருந்து வளர்ந்து, அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடி யிலே படுத்துக்கொண்டு, அவனுக்கு ஒரு மகளைப்போல இருந்தது. அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப் போக்கன் ஒருவன் வந்தான் அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போ க்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க, தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன் றைப் பிடிக்க மனதில்லாமல், அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக்கு ட்டியைப் பிடித்து, அதைத் தன்னிடத்தில் வந்த மனுஷனுக்குச் சமைய ல்பண்ணுவித்தான் என்று தாவீது செய்த துரோகத்தின் அகோரத்தை வெளிப்படுத்தும்படிக்கு ஒப்பனையான கதை ஒன்றை கூறினான். அப் பொழுது தாவீது: அந்த மனுஷன்மேல் மிகவும் கோபமூண்டவனாகி, நாத்தானைப் பார்த்து: இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரண த் திற்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லு கிறேன். அவன் இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தைச் செய்த படியினால், அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்த வேண் டும் என்றான். அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: நீயே அந்த மனுஷன் என்றான். தாவீது ராஜா முரட்டாட்டம் பண்ணாமல், தன் பாவத்தை உணர்ந்து, தேவன் முன்னிலையில் தன்னை தாழ்த்தினான். இந்த தாழ்மையின் பண்பு ஒரு கிறிஸ்தவனிடம் இல்லையென்றால் அவன் சாரமிழந்த உப்பைப் போல இருப்பான். தாழ்மையுள்ளவர்க ளுக்கு தேவன் கிருபை அளிக்கின்றார். பெருமையுள்ளவர்களுக்கோ எதிர்த்து நிற்கின்றார்.

**நீதிமொழிகள் 28:13**

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**

**ஜெபம்**: நொருங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை புறக்கணி க்காத தேவனே, கிறிஸ்தவ பண்பாகிய மனத் தாழ்மையுள்ளவன(ளா)ய் வாழும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கி றேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – ஏசாயா 53:3–8

# கிறிஸ்துவின் சிந்தை

மீட்பராகிய இயேசு கிறிஸ்து, தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். ஏன் இயேசு கிறிஸ்து தம்மை இப்படியாக தாழ்த்தினார்? நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம் கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் பிதாவாகிய தேவனுக்கு கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். மானிடம் மீட்படையும்படிக்காய் தன்னைத் தாழ்த்தினார். இயேசுவிடம் இருந்த அந்த சிந்தை எங்களில் உருவாக வேண்டும். இந்த உலகத்திலே நன் மை செய்வது இலகுவான காரியமல்ல. செய்த நன்மைக்கு நன்றியை பெற்றுக் கொள்வது மிகவும் அரிதான விடயம். இப்படிப்பட்ட சந்ததி யின் நடுவிலே நாங்கள் சாரமேற்றப்பட்ட உப்பைப் போல, கிறிஸ்துவின் பண்பை வெளிப்படுத்த வேண்டும். எப்படி? கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். தனக்கானவைகளை நோக்குபவன் கிறிஸ்துவின் பண்பையுடையவன் அல்ல. பிறருக்கானவைகளையும் நோக்குபவனே கிறிஸ்துவின் பண்பையுடையவானாக இருக்கின்றான். எனவே பாடுகள் வந்தாலும், கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவர்களாக மனத்தாழ்மையோடு முன்னேறிச் செல்வோம்.

**பிலிப்பியர் 2:3**

ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவனா(ளா)க,சுய நலத்தைவிட்டு, பிறர் நலம் கருதி வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மை செய்ய மறந்துவிடாதே

இயேசு ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று: இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள். அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினான் அவன் சமாரியனாயிருந்தான். அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரக்காணோமே என்று சொல்லி, அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த சம்பவத்தை சற்று மனக் கண்முன் கொண்டு வாருங்கள். நாங்கள் மற்றவர்களுக்கு நன்மை செய்யும் போது, நன்மையை பெற்றவர்கள் நன்றியறிதலுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். அப்படி, ஒருவர் நன்றியறிதலுள்ளவராக இருக்காவிடின், அவர் நன்றியற்றவன் என்று கூறிக் கொள்வோம். இந்த இடத்திலே இரண்டு விடயங்களை கருத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். முதலாவதாக, நாங்கள் கண்கண்ட சகோதரருக்கும், கண் கணாத தேவனுக்கும் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோமா? கிறிஸ்தவ பண்புடையவன் நன்றியுள்ளவனாக இருக்கின்றான். எனவே நாம் நன்றியறிதலுள்ளவர்களாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, குணப்பட்ட பத்துப் பேரில் ஒன்பது பேரை காணவில்லை. அதனால் இயேசு நன்மை செய்வதை விட்டுவிட்டாரா? இல்லை. அவர் எப்போதும் எவ்வேளையும் நன்மை செய்கின்றவராகவே இருக்கின்றார். மற்றவனுடைய நன்றியற்ற நிலையை கண்டு நீங்கள் கசப்படைந்து போய்விடாதிருங்கள். எங்கள் பிதாஇரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நாங்களும் இரக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும். எனவே பிதாவாகிய தேவனுக்கு நன்றியறிதலுள்ளவர்களாய் இருப்பதும், கைமாறு கருதாமல் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் ஒரு கிறிஸ்தவனுடைய பண்பு. அந்த நற்பண்பிலே நாளுக்கு நாள் வளருங்கள்.

**லூக்கா 6:35**

அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்கிறாரே.

**ஜெபம்:** இரக்கங்களின் தகப்பனே, நீர் எனக்கு தந்த இந்த மகத்துவமுள்ள அழைப்பிற்காக நன்றி. இந்த உலகிலே வாழும்வரைக்கும் கைமாறு கருதாமல் நன்மை செய்ய எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# துன்பத்தில் மத்தியில் சமாதானம்

இவர்கள் என்னை நிந்தையான வார்த்தைகளால் பேசி, அதிகமாக துன்பப்படுத்துகின்றார்கள் நான் என்ன செய்வேன் என்று ஒரு ஸ்திரி போதகரிடம் தன் நிலையை கூறினாள். போதகரோ அவளை நோக்கி: "ஆதி அப்போஸ்தலரின் நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, உதவி ஊழியத்திற்காக பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை தெரிந்து கொண்டார்கள். அவர்களில் ஒருவராகிய ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்." இன்று நாங்கள் ஸ்தேவானுடைய வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பார்ப்போமென்றால், இந்த சீஷன் அற்புத அடையாளங்களை செய்வதினால் விசேஷித்தவனாக இருக்கவில்லை. தேவ ஆவியை பெற்று தன் நற்சாட்சியான வாழ்வை மரணம் வரை காத்துக் கொண்டதினால் விசேஷித்தவனானான். எந்த நிலையிலும் விசுவாசத்தைவிட்டு தளர்ந்து போகாமல் மிகவும் உறுதியாக இருந்தான். யூத மத அதிகாரிகள் ஸ்தேவானுடைய அறிவுரையை கேட்டபோது, மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள். உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன் மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி அவனைக் கல்லெறிந்தார்கள். ஸ்தேவானை நிந்தித்து துன்பப்படுத்தினார்கள். அந்த வேளையிலும் அவன் மனம் தளர்ந்து போகாமல், "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று தன்னை தேவனிடம் அர்ப்பணித்தான். பின்பு முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான். இந்த நற்சாட்சியை சற்று சிந்தித்துப் பாருங்கள். இரத்தம் சிந்தி மரிக்கும் தறுவாயிலும் தன்னை துன்பப்படுத்துகின்றவர்களுக்காக ஜெபம் செய்தான். சகோத ரியே, இரத்தம் சிந்தும்படியான துன்பம் உனக்கு ஏற்படவில்லையே. எங்கள் கர்த்தராகிய இயேசு கூறியது போல உன்னை துன்பப்படுத் துகின்றவர்களுக்காகவும் நிந்திக்கின்றவர்களுக்காகவும் ஜெபம் பண்ணு ம்படி பழகிக் கொள். அதனால் உன்னுடைய மனதிலே பெரிதான சமாதானம் உண்டாகும் என்று போதகர் பதில் கூறினார்.

**மத்தேயு 5:44**

**உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.**

**ஜெபம்**: சகலவித ஆறுதலின் தெய்வமே, உம்முடைய வார்த்தையின்படி என்னை நிந்தித்து துன்பப்படுத்துகின்றவர்களை ஆசீர்வதித்து, அவர்களுக்காக வேண்டுதல் செய்ய எனக்கு பெலன் தந்தருள்வீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வேதமே அரு மருந்து

தன் தோட்டத்தில்மிகவும் கடினமாக வேலை செய்து கொண்டிருந்த மனிதனொருவனை, ஒரு வனவிலங்கு ஒன்று கடித்து காயப்படுத்தி விட்டது. அவனோடு தோட்டத்திலே வேலை செய்து கொண்டிருந்தவர்கள், நேரத்தை தாமதிக்காமல், உடனடியாக அவனை ஊரிலுள்ள மருத்துவரிடம் கொண்டு சென்றார்கள். மருத்துவர், அந்த வனவிலங்கினால் நீர்வெறுப்பு நோய் (Rabies) உண்டாகாதபடிக்கு அதற்குரிய தடுப்பு மருந்தையும், காயங்கள் ஆறும்படிக்கு அதற்குரிய மருந்தையும், அடுத்த சில கிழமைகளுக்கு எடுத்து எப்படியாக அவன் தன்னை பராமரித்துக் கொள்ள வேண் டும் என்பதையும் எடுத்துரைத்தார். நோய்களுக்கு வைத்தியர்கள் மருந்தை கொடுப்பது போல, எங்கள் பரம வைத்தி யராகிய இயேசு எங்கள் ஆன்மீக நோய்கள் தீரும்படிக்கான அரு மருந்தை (வழிமுறைகளை) எங்களுக்கு கூறியிருக்கின்றார். எடுத்துக் காட்டாக, மற்றவர்கள் எங்களுக்கு அநியாயம் செய்யும் போது அது மனவேதனையை உண்டாக்கின்றது. இதனால் மனிதர்கள் மனதிலே வன்மம், பகை, கசப்பு என்பவைகளை வளர்த்து, பழிக்கு பழி வாங்க வேண்டும் என்ற மனநிலையை அடைகின்றார்கள். அப்படிப்பட்ட மனதிலே தேவ சமாதானம் ஆட்கொள்ள முடியாது. மனதிலே கவலை பெருகும் போது என்ன செய்ய வேண்டும்? துன்பத்திலிருந்து விடுதலையடைய விரும்பினால், "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள் ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள்." "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." பிரியமானவர்களே, இப்படியாக, எங்களுக்கு கோபம் வரும்போது என்ன செய்ய வேண்டும்? எரிச்சல் பொறாமை வரும் போது என்ன செய்ய வேண்டும்? அதாவது அவற்றை மேற்கொள்வதற்கான அருமருந்தை பரிசுத்த வேதாகமம் எங்களுக்கு கற்றுத் தருகின்றது. இது இயேசுவின் வழி! அவ்வழியிலே நடப்பதே கிறிஸ்தவனின் பண்பு. அந்த வழியிலேயே நித்திய ஜீவன் உண்டு. தேவனுடைய வசனம் சமூலமும் சத்தியமுமாயிருக்கின்றது.

**சங்கீதம் 119:165**

உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு அவர்களுக்கு இடறலில்லை

**ஜெபம்**: ஆளுகை செய்யும் தேவனே, நீர் ஒருவரே எல்லாவற்றையும் அறிந்தவர். உம்முடைய திருச்சித்தம் நிறைவேறுவதற்கு தடையாக நான் போய்விடாதபடிக்கு என் ஆத்துமாவை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சுய புத்தியின்மேல் சாயாதே

> **நீதிமொழிகள் 3:5**
> உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து

தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு அவன் இப்பொழுது ஜெபம் பண் ணுகிறான். அவனும் அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன் னிடத்தில் வரவும், தான் பார்வையடை யும்படி தன்மேல் கைவைக்கவும் தரிச னங்கண்டான் என்றார். அதற்கு அன னியா: ஆண்டவரே, இந்த மனுஷன் எருச லேமிலுள்ள உம்முடைய பரிசு த்தவான்களுக்கு எத்தனையோ பொல் லாங்குகளைச் செய்தானென்று அவ னைக் குறித்து அநேகரால் கேள்விப்ப ட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான். அதற்குக் கர்த்தர்: நீ போ. அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார். அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர் த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்படு ம்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்களி லிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது. சவுல் பார்வை யடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான். பிரியமாவர்களே, அனனியா என்ற ஊழியர் கூறியது உண்மை. சவுல் என்பவன், சபை யையும் கிறிஸ்தவர்களையும் அதிகமாக துன்பப்படுத்தி வந்தான். ஆனால் கிறிஸ்துவையுடையவர்கள் தாங்கள் அறிந்தவைகளினால் நடத் தப்படுகின்றவர்கள் அல்லர். அவர்கள் தேவ ஆவியினால் நடத்தப்படு கின்றவர்கள். தேவனுடைய ஆவியை பெற்ற நாங்கள் தேவ ஆவியி னால் நடத்தப்படுகின்ற வர்களாயிருக்கின்றோம். எங்கள் அறிவு, ஆற் றல் மட்டுப்படுத்தப்பட்டது அவைகளினாலே தேவனுடைய வழியை அறி ந்து கொள்ள முடியாது. எனவே எங்கள் அறிவின்படியல்ல தேவ ஆவி யின் வழிநடத்துதலின்படி நாங்கள் கிரியைகளை நடப்பிக்க வேண்டும்.

**ஜெபம்**: அதிசயமான தேவனே, சுய புத்தியில் சாய்ந்து, உம்முடைய வழிகள் ஆச்சரியமானவைகள் என்பதை நான் ஒரு போதும் மறந்து விடாதபடிக்கு மனப்பிரகாசமுள்ள கண்களை தந்து நடத்துவீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சமாதானத்தின் பிள்ளைகள்

ஒரு ஐக்கியத்திலே இருந்த ஒரு விசுவாசி தன் உடன் சகோதரனொருவனுக்கு துரோகம் செய்ததால் அவர்களுக்கிடையே பிரிவினை ஏற்பட்டுவிட்டது. தனக்கு செய்யப்பட்ட தீங்கை நினைத்து மனம் தொய்ந்து போயிருந்த அந்த உடன் சகோதரனுக்கு அவ் ஐக்கியத்திலே இருந்த இன்னுமொரு மனிதன் ஆதரவாக இருந்தான். மாதங்கள் கடந்த பின்பு, குறிப்பிடப்பட்ட விசுவாசி தன் உடன் சகோதனுக்கு செய்த துரோகத்தை உணர்ந்த போது, அவனுடன் ஒப்புரவாகும்படி வகை தேடினான். ஆனால், அந்த உடன் சகோதரனுடைய துன்ப வேளையிலே அவனுக்கு ஆதரவாக இருந்த மற்றய மனிதனுக்கோ, அந்த உடன் சகோதரனானவன் தனக்கு விரோதமாக இருந்த சக விசுவாசியுடன் சமாதானம் செய்து கொள்ளுவதைக் குறித்து விருப்பமற்றவனாக இருந்தான். தன் இக்கட்டான வேளையிலே தனக்கு ஆதரவாக இருந்த அந்த மனிதனுடைய விருப் பத்திற்கு எதிராக எப்படி செயற்படுவது என்று அந்த உடன் சகோதரன், தனக்கு குற்றம் செய்த விசுவாசியுடன் சமாதானம் செய்து கொள்வதை தாமதித்துக் கொண்டிருந்தான். பிரியமானவர்களே, மேலே குறிப்பிடப்பட்ட சம்பவத்தை சற்று தரித்திருந்து சிந்தித்துப் பாருங்கள். வாழ்க்கையில் வரும் பல சூழ்நிலைகளினாலே நாங்கள் மேலே குறிப்பிடப்பட்ட சம்பவத்திலுள்ள மூன்று மனிதர்களில் ஒருவருடைய நிலைக்கு நாங்கள் தள்ளப்படலாம். நாங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும், நாங்கள் யார் என்பதையும், எங்களுக்கு கொடுக்கப்பட்ட தகுதியையும் ஒரு போதும் மறந்து போய்விடக் கூடாது. நாங்கள் பிதாவாகிய தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கின்றோம். இயேசு கிறிஸ்துவிலிருந்த ஆவியை பெற்றிருக்கின்றோம். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். ஐக்கியம், ஒருமைப்பாடு, சமாதானமாகிய இவைகள் தேவ புத்திரரின் குணயியல்புகள். ஆகவே நாங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று கூறிக் கொண்டு, சதோரருக்கிடையில் விரோதத்தை உண்டு பண்ணுவதையும், பிரிந்திருக்கும் சகோதரர்கள் மறுபடியும் ஒப்புரவாகுவதற்கும் தடையாக இருக்கவும் முடியாது. இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதல்ல. எந்த வேளையிலும் சபை ஐக்கியத்தின் ஒருமைப்பாட்டிற்காக கிரியைகளை நடப்பிக்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

**மத்தேயு 5:9**

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்

**ஜெபம்:** சமாதானத்தின் தேவனே, உம்முடைய திவ்விய சுபாவத்திற்கு பங்காளியாகிய நான், உமக்கு விரோதமாக பாவம் செய்யாதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசுவழியாக ஜெபி க்கிறேன் ஆமேன்.

புதன் | ஐப்பசி 21

📖 மாலை வாசகம் – ரோமர் 12:1 – 2

# யாரைப் பிரியப்படுத்துவது?

ஒரு மனிதனானவன், தன்னை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்ட தனது தந்தையாரை அதிகமாக நேசித்து வந்தான். அந்தத் தந்தையார், தன் மகனாகிய அந்த மனிதனுக்கு, அவனது சின்ன வயதிலிருந்து தேவன்மேல் எப்படி விசுவாசமாய் இருக்க வேண்டும் என்பதை குறித்து சொல்லாலும் கிரியைகளாலும் கற்பித்து வந்தார். இந்த உலகத்திலே உள்ள மனிதர்கள் எல்லாரைப் பார்க்கிலும், தன் தந்தையாருக்கு எல்லா விடயத்திலும் நான் கடமைப்பட்டிருக்கின்றேன் என்று அந்த மனிதனானவன் கூறிக் கொள்வான். பல ஆண்டுகள் கடந்து சென்றபின்பு, சில மனிதர்கள் அவனுடைய தந்தையாருக்கு துரோகம் செய்து, அவரைக் துன்பப்படுத்தினார்கள். இதனால் அந்த மனிதன் மிகவும் மன வேதனையடைந்தான். அவன் தன் தந்தையாரை அதிகமாக நேசிப்பது உண்மை. அவன் தன் தந்தையாருக்கு நன்றியறிதலுள்ளவனாக இருக்க வேண்டும் என்பது உண்மை. ஆனால் தன் தந்தை தனக்கு கற்பித்து கொடுத்த விசுவாச வாழ்க்கையானது அவனை தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வதிலிருந்து காத்துக் கொண்டது. துரோகத்தை துரோகத்தினால் வெற்றி கொள்ளுவது கிறிஸ்தவனின் பண்பு அல்ல. ஒருவன் மற்றவனுக்கு விரோதமாக குற்றம் செய்யும் போது அவன் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கின்றான். கண்கண்ட மனிதனுக்கும், எங்களை அதிகமாக நேசிக்கின்றவர்களுக்கும், நன்றியறிதலுள்ளவர்களாய் இருப்பது நல்லது. ஆனால் மனிதர்களுக்கு நன்றியறிதலுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று கூறி, அப்படி இருப்பதினால் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யக் கூடாது. இந்த உலகத்தினாலுண்டான நீதியினால் தேவனை பிரியப்படுத்த முடியாது. அதாவது, இந்த உலக போக்கின்படி எங்களுக்குள் உண்டாகும் சிந்தையானது மாம்சத்திற்குரியது. அந்த வழியின் முடிவிலே நித்திய மரணம் இருக்கும். ஒருவனும் கெட்டுப்போகமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு பிதாவாகிய தேவன் தாமே தம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவருடைய வழியிலே நடப்பவன் முடிவில்லாத வாழ்வை பெற்றுக் கொள்கின்றான். "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு." நீதிபரராகிய இயேசு வெளிப்படும் போது அவனவன் தன் தன் கிரியைகளுக்குரிய பலனை பெற்றுக் கொள்வது நிச்சயம்.

**ரோமர் 8:8**

மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்.

**ஜெபம்**: நீதியின் தேவனே, மனிதர்களுக்கு நன்றியுள்ளவனாக இருக்க வேண்டும் என்பதற்காக, இந்த உலக போக்கிலே நடந்து, உமக்கு பிரியமில்லாத காரியங்களை செய்யாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வியாழன் | ஐப்பசி 22

📖 மாலை வாசகம் – எபிரெயர் 12:2 – 3

# இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமை

குறிக்கப்பட்ட தீவு ஒன்றிலே விலையேறப்பெற்ற புதையல் இருக்கின்றது என்பதை அறிந்து கொண்ட சில நண்பர்கள் ஒன்றாகக் கூடி, கடல் வழியாக யாத்திரை செய்தார்கள். ஆரம்பம் பரபரப்பும், இனிமையானதுமாகவே இருந்தது. நாட்கள் கடந்து செல்லச் செல்ல அவர்களில் ஒருவன் பொறுத்திருக்க முடியாமல், தன் ஊருக்குத் திரும்பிவிட்டான். பல அசௌரியங்களின் மத்தியிலே, மற்ற நண்பர்கள் யாவரும் யாத்திரையைத் தொடர்ந்தார்கள். தாங்கள் விட்டுவந்த ஊரிலிருந்த சுகபோகங்களையும், தாங்கள் இதுவரை எதிர்நோக்கிய புயல் காற்றுக்களையும் ஒப்பிட்டுப் பார்த்த நண்பர்களில் ஒருவன், அருகிலுள்ள ஊருக்கு செல்லும் படி கரையேறினான். இப்படியாக நாட்கள் கடந்து செல்லும் போது, பொறுமையை இழந்து,தாங்கள் பெற்றுக் கொள்ளும் புதையலின் மேன்மையை உணராமல், அவர்களின் பலர் ஒன்றன்பின் ஒன்றாக பின் வாங்கிப் போனார்கள். ஆனால், மிகுதியாக இருந்த இருவர், தங்களுக்கு முன்னிருக்கும் புதையலின் மேன்மையை உணர்ந்து, தாங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை பொருட்படுத்தாமல் முன்னேறிச் சென்றார்கள். எப்படியாவது அந்த பந்தயப் பொருளை அதாவது புதையலை அடைய வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கமாக இருந்தது. அதை அவர்கள் அடைந்து கொண்ட போது, அவர்கள் அடைந்த மேன்மைக்கு எல்லை யில்லாதிருந்தது. பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்விலே பரபரப் பையும் (excitement), இனிமையையும் எதிர்பார்க்கின்றீர்களா? கிறிஸ்தவ வாழ்க்கையிலே பரபரப்பும் இனிமையும் உண்டு. அது இந்த உலகத்தின் மாம்சத்திற்குரிய பரபரப்பும் இனிமையும் அல்ல. அது கிறிஸ்துவுக்குள் நாங்கள் அடையும் ஆவிக்குரிய பரபரப்பும் இனிமையுமாகும். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே. தேவனுடைய சுதந்தரரும், கிறி ஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப்பாடுபட்டால் அப்படியாகும். (ரோமர் 8:17). நீங்கள் நன்மையை அடைந்து போகாமல் தடுப்பதற்கு இருளின் அதிகாரம்இந்த உலகிலே செயல்பட்டுவருகின்றது.எங்கள் பரம யாத்திரையில் அநேக பாடுகள் உண்டு. ஆனால் அவற்றை மேற்கொண்ட இயேசு எங்களோடு இருக்கின்றார். எனவே, அவரோடு மகிமையில் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் பொறுமையோடு முன்னேறிச் செல்வோம்.

**ரோமர் 8:18**

**ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.**

**ஜெபம்**: பரலோக பிதாவே, நான் தாபரிக்கும் தேசமாகிய பரலோகத்தை வந்தடையும் வரைக்கும், இந்த உலகத்தில் உண்டாகும் கஷ்டங்களினால் சோர்ந்து பின்னடையாதபடிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தயவுள்ளவர்களாயிருங்கள்

பண்னை ஒன்றில் இணைந்து பண்ணை உதவியாளராக வேலை பார்க்கும்படிக்கு, ஒரு மனிதன், அந்த பண்னை முதலாளியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். அந்த ஒப்பந்தத்தின்படி, பண்ணை உதவியாளர் வேலை செய்யவேண்டிய நாட்கள், நேரம், ஊதியும், ஓய்வு நாட்கள் மற்றும் கடமைகளும் பொறுப்புக்களும் விளக்கிக் கூறப்பட்டது. ஒரு சில கிழமைகள் சென்ற பின்பு, ஒரு நாள் அந்த பண்ணை முதலாளி, தன் பண்ணை உதவியாளனாகிய அந்த ஊழியனை அழைத்து, அவன் செய்யத் தவறிய கடமையை சுற்றிக் காட்டி அவனை கண்டித்தான். ஒப்பந்தத்தின்படி, அவன் குற்றத்திற்காக ஊதிய கழிவை செய்து, அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டான். அதை கேள்விப்பட்ட சக ஊழியர்கள், ஏன் இப்படியாக செய்தீர்கள் என்று பண்ணை முதலாளியைக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு மறுமொழியாக, நான் அந்த ஊழியனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி அவனை வேலை நீக்கம் செய்து கொண்டேன் அதில் என்ன தவறு என்று கேட்டுக் கொண்டான். ஒப்பந்தத்தின்படி அவன் வேலை நீக்கம் செய்யப்பட்டான் என்று முதலாளி கூறிய போது, சக ஊழியர்களுக்கு மேற்கொண்டு எதையும் கூற முடியவில்லை. பிரியமானவர்ளே, சட்டதிட்ட ஒழுங்கு முறைமைகளின்படி நாங்கள் ஒவ்வொருவரும் தேவனால் தண்டிக்கப்பட்டால் யார் அதில் தப்பித்துக் கொள்ள முடியும்? ஒருவரும் தப்பித்துக் கொள்ள முடியாது. இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன், நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். எனவே, மன்னிப்பபையும், இரக்கத்தையும் சட்ட திட்டங்களின்படி வழங்காமல், எங்கள் பரம தந்தையைப் போல தாராளமாக அள்ளி வழங்குங்கள். உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற உங்கள் காரியங்களில், உங்கள் தயவை மற்றவர்களுக்கு காண்பியுங்கள். நியாத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்.

**சங்கீதம் 103:10**

**அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, நீர் என்மேல் காட்டி வருகின்ற உம்முடைய இரக்கத்திற்கு முடிவில்லை. அதுபோல நானும் என்னுடைய காரியங்களிலே மற்றவர்களுக்கும் இரக்கத்தை காண்பிக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இ ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முன்குறித்த காரியம்

இஸ்ரவேல் புத்திரரில் யெப்தா என்ற ஒரு மனிதன் இருந்தான். அவனுடைய தாயானவள் ஒரு அந்நிய ஸ்திரியாயிருந்ததால், அவனுக்கு தகப்பன் வீட்டிலே சுதந்தரம் இல்லை. நீ அந்நிய ஸ்திரீயின் மகன் என்று சொல்லி அவனைத் துரத்திவிட்டார்கள். யெப்தா தன் சகோதரரை விட்டு ஓடிப்போய் தோப் என்னும் தேசத்திலே குடியிருந்தான். சிலநாளைக்குப்பின்பு, அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ணினார்கள். அவர்கள் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ணும்போது கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவைத் தோப்தேசத்திலிருந்து அழைத்துவரப்போய், யெப்தாவை நோக்கி: நீ வந்து, நாங்கள் அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ண எங்கள் சேனாபதியாயிருக்க வேண்டும் என்றார்கள். அதற்கு யெப்தா கீலேயாத்தின் மூப்பரைப் பார்த்து: நீங்கள் அல்லவா என்னைப் பகைத்து, என் தகப்பன் வீட்டிலிருந்து என்னைத் துரத்தி னவர்கள்? இப்பொழுது உங்களுக்கு ஆபத்து நேரிட்டிருக்கிற சமய த்தில் நீங்கள் என்னிடத்தில் ஏன் வருகிறீர்கள் என்றான். அதற்குக் கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை நோக்கி: நீ எங்களுடனேகூட வந்து, அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ணி, கீலேயாத்தின் குடிகளாகிய எங்கள் அனைவர்மேலும் தலைவனாயிருக்க வேண்டும் இதற்காக இப்பொழுது உன்னிடத்தில் வந்தோம் என்றார்கள். யெப்தா அவர்களோடு சென்று யுத்தத்தில் வெற்றி பெற்று, இஸ்ரவேலை ஆறு வருஷம் நியாயம் விசாரித்தான். பிரியமானவர்களே, தேவனுடைய வழியை மனிதர்கள் மாற்றிவிட முடியாது. யெப்தாவை ஆகாதவன் என்று அவர்கள் தள்ளினார்கள் ஆனால் தேவன் முன் குறித்த நேரம் வந்த போது, அவனை துரத்திவிட்டவர்களே அவனிடத்தில் வந்து, அவனை அழைத்துச் சென்று தங்களை ஆளும் தலைவனாக மாற்றினார்கள். “சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?” பிரியமானவர்களே, சர்வ வல்லமையுள்ள தேவன் உங்கள் வாழ்க்கையை குறித்து முன்குறித்த நன்மையான ஈவுகளை ஒருவரும் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் நீங்கள் மனந்தளராமல் பொறுமையோடு தேவனுடைய நேரத்திற்காக காத்திருங்கள். தேவனுடைய சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேற இடங் கொடுங்கள். தேவன் அதை நிறைவேற்றி முடிப்பார்.

**பிரசங்கி 3:11**

அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்

**ஜெபம்**: கைவிடாத தேவனே, நீர் என்னை குறித்து முன்குறித்திருக்கும் திட்டம் என்னில் நிறைவேறும்படிக்கு உம்முடைய நேரத்திற்காக பொறுமையோடு காத்திருக்கும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனின் அழகான திட்டம்

யோவான் ஸ்நானன் என்ற தேவ ஊழியன், இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் முன்னோடியாக வந்திருந்தார். ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை என்று இயேசு கிறிஸ்து இவரைக் குறித்து சாட்சி கொடுத்தார். காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது தான் செய்த எல்லா பொல்லா ங்குகளினிமித்தமாகவும், யோவானாலே கடிந்துகொள்ளப்பட்ட போது, தான் செய்த மற்றெல்லாப் பொல்லாங்குகளும் தவிர, யோவானையும் காவலில் அடைத்து வைத்திருந்தான். தன்னுடைய பிறந்த தினத்தின் கொண்டாட்டத்தில் பரிசுத்தவானாகிய யோவான் ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுவித்தான். இந்த கொடூரமான சம்பவத்தின்படி யோவான் ஸ்நானனைக் குறித்த தேவனுடைய திட்டம் பூர்த்தியாகிவிட்டதா? இந்த பூமியிலே பரிசுத்தவானாகிய யோவான் ஸ்நானின் பாடுகள் நிறைவேறியிருக்கின்றது. ஆனால் இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்த மும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார். இதோ, மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள் பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென். ஆம் பிரியமானவர்களே, அவரோடே கூட தம்முடைய பரிசுத்தவான்கள் அடையும் பலனும் வருகின்றது. அந்நாளிலே தேவன் தம்முடையவர்களுக்கு ஆதிமுதலாய் நியமித்திருந்த அழகான திட்டம் நிறைவேறும். இந்த உலகத்திலே கண்ணீரோடு விதைக்கின்றவர்கள் பரலோகிலே கெம்பீரமாக அறுக்கும் காலம் வருகின்றது. எனவே, இந்த பூமியிலே தேவனுடைய சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேற இடங் கொடுங்கள். பரம தேசத்திலே பரனோடு நீடூழி வாழும் பாக்கியத்தை எண்ணிப் பாருங்கள். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் நாடிச் செல்வோம்.

**வெளி 22:12**

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.**

**ஜெபம்:** நித்தியமான தேவனே, இந்த பூமியிலே வாழும் நாட்களிலே என்னை குறித்ததான உமது சித்தம் என்னில் நிறைவேறும்படி வாஞ்சிக்கின்றேன். என்னை பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதிமான்களின் வழி

வேத வார்த்தைகளின்படி தன் நடக்கையை காத்துக் கொள்ளும் மனிதனொருவனைப் பார்த்து அவன் அயலவர்களில் சிலர் அவனை கேலி செய்தார்கள். அதாவது, இந்த உலகத்திலே எப்படி உல்லாசமாக வாழ்ந்து களிப்பது என்பதை உணராமல், ஒரு புறம்போக்கான வாழ் க்கை வாழ்கின்றானே என்று தமக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். தேவனுக்கு பிரியமாக வாழ விரும்பும் மனிதர்கள்யாவரும்இத்தகைய வசைச் சொற்களை நிச்சயமாக கேட்டிருப்பார்கள். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். கர்த்தரை கனத்தோடும் பயபக்தியோடும் சேவிப்பது மெய் ஞானத்தில் ஆரம்பம் என்றால், கர்த்தரை அசட்டை செய்து, துணிகரமான வார்த்தைகளை தேவனுக்கு எதிராக கூறுகின்றவர்கள் என்ன சொல்வது? மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள். (நீதி 1:7). இந்த உலகத்தின் முறைமையின்படி கல்விமான்களை ஞானிகள் என்றழைக்கின்றார்கள். ஆனால் ஒருவன் கர்த்தரை கனத்தோடும் பயபக்தியோடும் சேவிக்காதிருந்தால் அல்லது அவருடைய போதகத்தை அசட்டை செய்யபவனாக இருந்தால் மெய் ஞானம் அவனிடத்திலில்லை. அதனால் அவர்கள் துணிகரம் கொண்டு, தேவன் எதை செய்யாதே என்று புறக்கணித்திருக்கின்றாரோ, அவைகளை ஆவலோடு நடப்பிக்கின்றான். அதுமட்டுமல்லாமல், தங்களைப் போல வாழ்க்கையை நடத்தாதவர்களை பார்த்து, மதியீனர்கள் என்று நகைக்கின்றார்கள். “துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இர வும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக் கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள். ஆகையால் துன் மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை. கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார் துன்மார்க்கரின் வழியோ அழியும்.” எனவே சோர்ந்து போகாமல் வேத வார்த்தைகளின்படி உங்கள் நடக்கையை காத்துக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 1:6**

**கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார் துன்மார்க்கரின் வழியோ அழியும்.**

**ஜெபம்**: பெலப்படுத்தும் தேவனே, உம்மை அறியாத மனிதர்களின் அறியாமையினாலே நான் சோர்ந்து பின்னிட்டு போகாதபடிக்கு நீர் என்னை அழைத்த அழைப்பிற்கு பாத்திரனாய் நான் நடக்க கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழி யாக ஜெபி க்கிறேன் ஆமேன்.

# மேன்மையானதை பற்றிக் கொள்ளுங்கள்

பலகோடிக்கணக்கான டொலர்களை செலவழித்து அழகானதொரு ஆலயத்தை அமைக்கலாம். அதன் பெறுமதியினால் சர்வ வல்லமையுள்ள தேவனை, நம்மால் கவர்ந்து கொள்ளக் கூடுமோ? இல்லை. ஒரு சிறிய ஓலை கொட்டிலாக அமைக்கப்பட்டிருக்கும் ஆராதனை ஸ்தலத்தை கண்டு, இது என் தகுதிக்கு ஏற்புடையதல்ல என்று அதனை தேவன் புறம்பே தள்ளி விடுவாரோ? இல்லை. இந்த உலகிலே வாழும்வரை எங்கள் சரீரத்தை நாங்கள் பேணிப் பாதுகாக்கின்றோம். ஆனால் கொடுக்கப்பட்ட வாழ்நாட்களிலே சரீரத்திற்குரியவைகளைவிட ஆத்துமாக்குரியவைகளைக் குறித்து மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அதுபோலவே, தேவனை கூடி ஆராதிக் கும்படி ஆராதனை ஸ்தலங்களை கட்டி பேணிப் பாதுகாப்பதுநல்லது ஆனால் அதைவிட அங்கு கூடிவரும் மனிதர்களையும் அவர்களுடைய ஆத்துமாக்களைக் குறித்த கவனம் மிக அதிகமாக இருக்க வேண்டும். எங்கள் சரீரம் ஒரு நாள் மண்ணோடு அழிந்து போய்விடும். அதுபோலவே, வானமும் பூமியும் அதிலுள்ளவைகள் யாவும் அழிந்து போய்விடும். எங்கள் ஆத்துமா அழியாமையை தரித்துக் கொள்ளும் படிக்கு நாளுக்கு நாள் கிறிஸ்துவின் சாயலை அணிய வேண்டும். கட்டிடங்களின் அழகையும், மனித சரீரத்தின் வெளித் தோற்றத்தையும் பருமனையும் வைத்து தேவனுடைய சமூகம் மனிதர்கள் மத்தியில் வருவதில்லை. ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே **எங்கே கூடியிருக்கிறார்க ளோ**, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். சற்று கவனித்து பாருங்கள் "**எங்கே கூடியிருக்கிறார்களோ**". ஒரு வேளை அது இடாம்பிகரமான கட்டிடமாக இருக்கலாம் அல்லது எளிமையான கொட்டிலாக இருக்கலாம். எங்கே மனிதர்கள் இயேசுவின் நாமத்தில் ஒருமித்து வருகின்றார்களோ அவர்கள் நடுவே அவர் வாசம் செய்கின்றவராக இருக்கின்றார். தேவன் தாமே, அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்க தைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவராயுமிருக்கின்றார். பிரியமானவர்களே, எது மேன்மையானதோ அதிலே அதிக கவனத்தை செலுத்துங்கள். நித்தியமானதை பற்றிக் கொள்ளுங்கள்.

**மத்தேயு 18:20**

ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.

**ஜெபம்**: பரலோக தேவனே, அநித்தயமானவைகள் எவை, நித்தியமானவைகள் எவை என்பதை ஆராய்ந்தறிந்து, நித்தியமானவைகளை பற்றிக் கொள்ளும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எதிரிடையான சூழ்நிலைகள்

பிலிப்பி பட்டணத்திலே குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் இருந்தாள். ஒரு நாள் பவுல் மற்றும் சீலா என்னும் தேவ ஊழியர்கள் அவளை கண்டபோது, நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளை யிடுகிறேன் என்று பவுல் அந்த குறிசொல்லுகின்ற அசுத்த ஆவியுடனே சொன்னான். அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று. அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு, பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தை வெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டுபோனார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களைஅடிக்கவும் சொல்லி, அவர்களை அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப்பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதி ர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று." இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். வஸ்திரங்கள் கிழிக்கப்பட்டு, காயங்களுடன், கால்கள் தொழுமரத்திலே மாட்டி வைக்கப்பட்டிருக்கும் பவும் சீலாவும் சிறைச்சாலையிலிருந்து தேவனைத் துதித்து பாடினார்கள். அங்கே தேவனுடைய செயலை யாவரும் கண்டு பயந்தார்கள். நாங்கள் இருக்கும் இடத்தையோ அல்லது சுற்றாடலையோ தேவன் பார்ப்பதில்லை. நாங்கள் ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிப்பதிலேயே அவர் பிரியப்படுகின்றார். எங்கள் வாழ்கையில் துன்பங்கள், துயரங்கள், கஷ் டங்கள், பாடுகள் வரலாம். அவைகள் மத்தியிலும், எந்த சூழ்நிலையிலும் உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, தேவனை பாடித் துதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**எபேசியர் 5:20**

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து,

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, சூழ்நிலைகளை கண்டு மருளாதபடிக்கு, எல்லா சூழ்நிலைகளிலும் உம்மை பாடித் துதித்து தடையை மேற்கொள்ளும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

gtachurch.ca

# சபை ஐக்கியம்

தேவனாகிய கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாகிய இஸ்ரவேல் ஜனங்களின் பிரதான ஆலயம் எருசலேமிலே இருந்தது. அந்நாட்களிலே, தேவனை தொழுது கொள்வதற்காக முன் குறித்ததினங்களிலே, ஜனங்கள் அங்கே கூடி வருவார்கள். எருசலேம் தேவாலயத்திற்கு சென்று வருவது, தேவ பக்கியுள்ளவர்களின் வாழ்க்கையிலே பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாக இருந்து வந்தது. சம்பவம் 1: தாவீது என்னும் தேவ பக்தன் மேல் தேவனுடைய அபிஷேகம் இருந்ததால், சவுல் என்பவன், தன்னுடைய ராஜ்யபாரத்தை தாவீது பெற்றுக் கொள்வான் என்று பயந்ததினால், தாவீதை கொன்று போடும்படி வகை தேடித் திரிந்தான். இதனால் தாவீது தன் நாட்டை விட்டு ஓடிச் சென்று, மலைகளிலும் கெபிகளிலும் இருக்க வேண்டியதாயிற்று. அங்கிருந்து தான் எருசலேம் ஆலயத்திற்கு செல்ல முடியாதிருப்பதையிட்டு மன வேதனை அடைந்தான். சம்பவம் 2: பாபிலோன் ராஜாவினால் எருசலேம் முற்றுகையிடப்பட்டு, தானியேல் என்னும் வாலிபன் அங்கே கைதியாக கொண்டு செல்லப்பட்டான். ஆனால் அவன் அங்கேயிருந்து தினம் மூன்று வேளையும், எருசலேமை நோக்கியடி, தேவனுக்கு முன்பாக முழங் காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தி வந்தான். மேற்கூறிய சம்பவங்களிலே, தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட தவிர்க்க முடியாத சூழ்நிலைகளிலே அவர்கள் அகப்பட்டிருந்ததால் அவர்களுக்கு ஆலயம் செல்ல முயாதிருந்தது. எனவே, உங்கள் வாழ்க்கையிலும் தவிரக்க முடியாத, உங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டாலொழிய தேவ ஜனங்கள் கூடிவரும் சபைக்கு சென்று ஆராதிப்பதை நிறுத்திவிடாதிருங்கள். சபை கூடிவராதிருப்பதற்கு அல்லது ஆராதனையில் கலந்து கொள்ளாதிருப்பதற்கு சாட்டுப் போக்குகளை கூறாதிருங்கள். நாங்கள் தனித்திருந்து ஜெபிக்க வேண்டிய நேரங்கள் உண்டு. அதே வேளையில் நாங்கள் சபை ஜனங்களோடு கூடி ஐக்கியப்பட்டு தேவனை ஆராதிக்கும் நேரமும் உண்டு. நாளானது சமீபித்துவருகிறதை உணர்ந்தவர்களாய் காலத்தை ஆதயப்படுத்திக் கொள்ளுங்கள்.

**எபிரெயர் 10:24-25**

மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல்,ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்

**ஜெபம்**: இருதங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, சபை கூடிவருதலை விட்டுவிட வகை தேடாதபடிக்கும், சபை ஐக்கியத்தின் ஒருமைப்பாட்டில் நாளுக்கு நாள் வளர்ந்து பெருகும்படிக்கும் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கற்றவைகளை கைக்கொள்ளுங்கள்

பாடசாலைக்கு சென்று வருகின்றேன் என்றொரு திருப்தி ஒரு மாணவனின் மனதிலிருந்தது. ஆனால் அவன் வீடு திரும்பியதும், பாடசாலையில் கற்ற எந்த பாடங்களையும் மீள்ஆய்வு செய்வதையோ, அதை குறித்த எந்த கரிசனையோ இல்லாதிருப்பதை அவனுடைய பெற்றோர் கவனித்தார்கள். மாணவனுடைய தந்தையார் அவனை நோக்கி: மகனே, நீ உற்சாகமாக பாடசாலைக்கு சென்று வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால், நீ பரீட்சையில் சித்தி பெற்றுவாழ்க்கையில் முன்னேற வேண்டுமாயின் கற்ற பாடங்களை மறுபடியும் வீட்டில் கற்றுக் கொள்ள வேண்டும், அந்த பாடங்களின்படி உன் அறிவு பெருக வேண்டும். அந்த அறிவு, உன் நாளாந்த விவகாரங்களில் பயிற்சி செய்யப்பட வேண்டும் என்று புத்திமதி கூறினார். சற்று இந்த சம்பவத்தை எங்கள் ஆவிக்குரிய வாழ் க்கையோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். பொதுவாக, ஆலயத்திற்கு சென்று வருவதையிட்டு மனிதர்கள் திருப்தியடைவதுண்டு. அவர்களை பார்க்கும் மற்றய மனிதர்களும், “இந்த மனிதன் பக்தியுள்ளவன்” என்று கூறிக் கொள்வார்கள். பிரியமானவர்களே, தவறாமல் ஆராதனையில் பங்கு பெறுவது நல்லது. அதை செய்து வந்தால் விட்டுவிடாதிருங்கள். அதை நீங்கள் செய்யத் தவறினால், தவறாமல் ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்கள் வாழ்க்கையை மாற்றியமையுங்கள். அத்தோடு நின்றுவிடாமல், வீடு திரும்பியதும், ஆலயத்திலே போதிக்கப்படும் தேவ வார்த்தைகளை மறுபடியும் கேளுங்கள் அல்லது நீங்கள் எழுதிய குறிப்புக்களை திரும்பவும் தியானியுங்கள். அதன்படி நாளுக்கு நாள், உங்கள் சுபாவங்கள் தேவனுக்கேற்றதாக மாறும்படிக்கு, தேவ வார்த்தைகள் உங்களில் கிரியைகளை நடப்பிக்க இடங் கொடுங்கள். பாடசாலையிலே சுகாதரத்தை பற்றி படிதத மாணவன், தன் வாழ்க்கையை சுகாதாரமற்ற முறையில் வாழ்ந்து வந்தால், அவன் கற்றது அவன் வாழ்க்கைக்கும் அவனோடு கூடி வாழ்பவர்களுக்கும் பிரயோஜனமற்றதாக இருக்கும். உள்ளான மனிதன் கிறிஸ்துவின் சாயலில் நாளுக்கு நாள் வளரும்படிக்கு நீங்கள் கேட்ட தேவ வார்த்தைகளை உங்கள் வாழ்க்கையில் கைக் கொள்ளுங்கள். தேவ வசனமே உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லதாயிருக்கின்றது.

**யாக்கோபு 1:22**

அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

**ஜெபம்**: வழிநடத்தும் தேவனே, நான் கேட்கும் உம்முடைய ஜீவ வார்த்தைகள் என் ஆத்துமாவிற்கு பலன் கொடுக்கத்தக்கதாக அவைகளில் நடக்கும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜீவன் தரும் திரு வார்த்தைகள்

**பிலிப்பியர் 3:1**

**எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும்.**

ஒரு பாடசாலையில் விஞ்ஞான பாடத்தை கற்பித்த ஆசிரியர், குறிப்பிட்ட ஒரு கடினமான பாடத்தை மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் போது, அந்த பாடத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட அடிப்படை விஞ்ஞான சூத்திரத்தை, திரும்பத் திரும்ப சொல்லிக் கொடுத்துக் கொளவார். குறிப்பிட்ட தவணை முடியும் வரைக்கும், அவர் வகுப்பிற்கு வரும்போதும், பாடத்தை முடித்து போகும்போதும், அந்த சூத்திரத்தை சுவாரசியமான முறையில் சொல்லிக் கொள்வார். இந்த செய்கையானது நாளடைவில் மாணவர்களுக்கு ஒரு நகைச்சுவையாக மாறி விட்டது. மாணவர்கள் யாவருமே அந்த பாடத்தில் சித்தி பெற வேண்டும் என்பதே அந்த ஆசிரியரின் பிரதானமான நோக்கமாக இருந்தது. அந்த விஞ்ஞான சூத்திரமானது, அந்த வகுப்பிலிருந்த மாணவர்கள் யாவரின் மனதிலும் பதித்துவிட்டது. அந்த மாணவர்களின் பாடசாலை நாட்கள் முடிந்து, பல தசாப்தங்கள் கடந்து சென்றபின்பும், அவர்கள் அந்த சூத்திரத்தை மறந்து போகவில்லை. இவ்வண்ணமாகவே, எங்கள் தேவனாகிய கர்த்தர் தம்முடைய அநாதி தீர்மானத்தை எங்களில் நிறைவேற்றும்படிக்கு, எங்கள் வாழ்க்கையை நாங்கள் பரிசுத்தமாக காத்துக் கொள்ளும்படி, பரிசுத்த வேதாகமத்தின் வழியாக, திரும்ப திரும்ப வலியுறுததிக் கூறியிருக்கின்றார். சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு பொருளின் அடிப்படை அம்சத்தை அதிலிருந்து நீக்கிவிட்டால் அந்த பொருள் அதன் செய்கையை இழந்து விடும். உப்பு சாரமிழந்து போனால் அந்த உப்பினால் பலன் ஏதும் இல்லை. கிறிஸ்துவின் ஆவி ஒருவனிடத்தில் இல்லாதிருந்தால் அவன் கிறிஸ்தவனாக வாழ முடியாது. கண் கண்ட சகோதரனை நேசிக்காதவன், கண் காணாத தேவனை எப்படி நேசிப்பான். தேவ சித்தத்தை நிறைவேற்றுங்கள். தேவ வசனத்திற்கு கீழ் படிந்து, விசுவாச வாழ்க்கையை காத்துக் கொள்ளுங்கள். உலகத்திலே பொக்கிஷங்களை சேர்க்காதிருங்கள் என்னும் வார்த்தை அடிக்கடி பேசப்படும் வார்த்தைகளில் சில. சாத்தானின் வஞ்சிக்கும் தந்திரங்கள் புதிதானவைகள் அல்ல. எப்படியாக அவன் ஏவாளை தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக பாவம் செய்யும்படி வஞ்சித்தானோ, அப்படியே இன்றும் செய்து வருகின்றான். எனவே தேவ வார்த்தைகளை திரும்பத் திரும்ப தயவாய் கூறி, ஒருவரை ஒருவர் பக்திவிருத்தியடையச் செய்யுங்கள். வார்த்தையின் வல்லமையால் உறுதியடையுங்கள்.

**ஜெபம்:** உன்னதமான தேவனே, தேவ வார்த்தைகள் பேசப்படும் போது, அவைகளினால் சலிப்படைந்து போகாதபடிக்கு, அவைகளின் மேன்மையை உணர்ந்து வாழும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

முகவரி ADDRESS:

நகரம் CITY:

மாநிலம் PROVINCE:

தபால் குறியீடு POSTAL CODE:

**மேலதிக விபரங்கள்**

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ______

**மின் அஞ்சல் E-MAIL:**

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9

www.gtachurchnet.ca ☎ 416.613.2909